# ஆண்டறிக்கை - 2015




## விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்

## பேராதனைப் பல்கலைக்கழகம்

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| A | 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளரின் மீளாய்வு | 1 |
| | அறிமுகம் | |
| | கல்வி நிகழ்ச்சிகள் | |
| | ஆய்வு நடவடிக்கைகள் | |
| | வருடாந்த காங்கிரஸ் | |
| | அடைவுகள் | |
| | பலவீனங்கள் | |
| | எதிர்காலத் திட்டங்கள் | |
| B | வளங்கள் மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 4 |
| C | பதவியணியினர் | 6 |
| D | ஆய்வு விபரங்கள் | 7 |
| E | சர்வதேசம் | 13 |
| F | 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கபட்ட புதிய பாடநெறிகள் | 14 |
| | விவசாய நூலக அறிக்கை | |
| | வெளிப்படுத்தல்களும் சட்டமுறை அறிக்கையும் | 15 |
| | கணக்காய்வு குழு அறிக்கை | |
| | 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் அதற்கான பதில்களும் | 17 |

## 1. தொலைநோக்கு

விவசாயம் மற்றும் அதனோடு இணைந்த துறைகளில் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி மற்றும் அடைவுகளினூடாக நாட்டினதும் தொழிற்துறையினதும் மற்றும் உலகலாவிய சமூகத்தினதும் தேவைகளை தேவைகளுக்கான சேவையினை வழங்குகின்ற சிறந்த நிலையமாக செயற்படுதல்.


## 2. செயற்பணி

உயர்தர கற்பித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் என்பனவற்றின் மூலம் சிறந்த கல்விசார், செயன்முறைப் ரீதியான பயிற்சியினை வழங்குவதன் மூலம் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளிற்கு சாதகமான பங்களிப்பை வழங்கக் கூடிய தேர்ச்சிமிக்க, புத்தாக்கமுடைய ஈடுபாடுடைய தொழில்வாண்மையினரை உருவாக்குவதற்கான பட்டப்பின்படிப்பு மற்றும் ஆய்வு என்பனவற்றின் மையமாக சேவையாற்றுதல்.

### நோக்கங்கள்

1. சிறந்த கல்வி தரத்தை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
2. பட்டப்பின் படிப்பிற்கான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது தொடர்பான சிறப்பான ஒரு மையாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அங்கீகாரத்தைப் பெறுதல்
3. கண்டு பிடிப்புக்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான கலாசாரத்தை ஸ்தாபித்தல்
4. நிதியுடன் சார்ந்த பலம்வாய்ந்த நிறுவனமொன்றாக உருவாகுதல்

# விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அமைப்பு வரைபடம்




**Abbreviations:**
AR - Asst. Registrar
SAB - Senior Asst. Bursar
SA/P - Systems Analyst *cum* Programmer
SPSD - Senior Personal Secretary to the Director

* **Boards of Study:**
Agricultural Biology
Agricultural Economics
Agricultural Engineering
Agricultural Extension
Animal Science
Business Administration
Bio-Statistics
Crop Science
Food Science & Technology
Plant Protection
Soil Science

ஆண்டறிக்கை 2015
விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
(2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

## A பணிப்பாளர் அவர்களின் மீளாய்வு /அறிக்கை

## 1. அறிமுகம்

விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகமானது (PGIA) 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச்சட்டத்தின் படி 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பழைய இலங்கை பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைய 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இலங்கை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டத்தின் 16 ஆம் இலக்க ஏற்பாடுகளின் கீழ் மேற்படி நியதியானது 1979 ஆண்டு 9 ஆம் இலக்க கட்டளைச் சட்டமாக்கப்பட்டது. இதற்கமைய இந்நிறுவகமானது 1980 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுகின்றது. இத்தனித்துவமான நிறுவகத்தை தாபிப்பதற்கான பிரதான நோக்கம் உள்நாட்டு பட்டப்பின்படிப்பு கல்வி இயலளவை அபிவிருத்தி செய்தலும் போதுமான பயிற்சிகளை விஞ்ஞான ரீதியாக ஆளணிகளுக்கு துரிதமாக விரிவடைந்துவரும் விவசாய துறைக்காக வழங்குவதுமாகும். இது பேராதனைப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்ததாகவும் காணப்படுகின்றது. இந்நிறுவகத்தின் ஆளுகையானது முகாமைத்துவ சபை மூலமாக நடைபெறுகின்றது.

### 1.1 கல்விசார் நிகழ்ச்சிகள்

தனது நோக்கங்களை அடைவதற்காக நிறுவகமானது தற்போதைய இலங்கைப் பொருளாதார துறையில் முக்கியத்துவம் வாய்ந்த பல உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்துள்ளது. நாட்டின் கேள்விக்கு ஏற்றவாறு கலைத்திட்டமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தற்போது விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் கலாநிதி, DBA, தத்துவமானி மற்றும் 31 முதுமானி பட்டங்களை வழங்குகின்றது. தனது பட்டப்பின் படிப்புத் துறையில் நிறுவகமானது முழு நேர வதிவிட பயிற்சியை வழங்குகின்றது. இதனால் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு முழு நேரம் பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகளிலும் ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடியதாகவுள்ளது. விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் எதிர்கொள்ளும் பிரதான சவால் ஒழுக்கமும், தியாக சிந்தையும் உடைய கல்விசார் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் அதிக நேரத்தை செலவிட்டு உரிய துறையில் சிறந்த பெறுபேறைப் பெறக்கூடிய சிறந்த மாணவர்களை கல்விசார் நடவடிக்கைகளுக்கு அனுமதிப்பதாகும்.

தற்போது கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கை 300 இலும் அதிகமாகும். இவர்கள் பரந்த கற்பித்தல் மற்றும் ஆய்வு அனுபவங்களைக் கொண்டவர்கள். இவர்களுள் அதிக பதவியணியினர் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையவர்கள் பல்கலைகழத்தின் ஏனைய பீடங்களையும் அரச திணைக்களங்களையும், ஆய்வு நிறுவகங்களையும், கூட்டுத்தாபனங்களையும், தனியார் நிறுவகங்களையும் சர்வதேச தாபனங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் சேர்ந்தவர்கள்.

நிறுவகம் விவசாய உயிரியல் முதுமானிப்பட்டப் பாடத்திட்டத்தை மீளாய்வு செய்து தாவர உயிரியல் காப்பு மற்றும் போசணை துறையில் முதுமானிப் பட்டம் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது. இது விவசாய உயிரியல் கல்வி சபையின் கீழ் வழங்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு 395 மாணவர்கள் 11 கல்வி சபைகளின் கீழ் கல்வி நடவடிக்கைகளுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவற்றின் விபரம் வருமாறு,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விஞ்ஞான முதுமானி | - | 316 | 3. | கலாநிதி | - | 28 |
| 2 | வியாபார முதுமானி | - | 34 | 4 | அமைய | - | 08 |
| 3 | தத்துவமானி | - | 29 | | | - | |

பின் வரும் துறைகளில் 321 மாணவர்கள் தமது பட்டப்பின் படிப்பை முடித்துக் கொண்டு 2015 ஆம் ஆண்டு பொதுப் பட்டமளிப்பு விழாவில் தமது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | கலாநிதி | - 09 | 4. | தத்துவமானி | - | 28 |
| 2. | விஞ்ஞான முதுமானி | - 265 | 5. | வியாபார முதுமானி அமைய | - | 08 |
| 3. | பட்டப்பின் டிப்ளோமா | - 29 | | | - | |

### 1.1.1 பிரயோக புள்ளிவிபரவியலில் விஞ்ஞான முதுமானிப்பட்டம் - கானா

கானா நாட்டில் பிரயோக புள்ளிவிபரவியல் துறையில் விஞ்ஞான முதுமானி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2015 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. யேசுவா நிறுவகத்திற்கும் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய உயிரியல் புள்ளி விபரவியல் கற்கை சபை கல்விசார் பதவியணியினருக்கு கற்கை நெறிகளைப் பயிலுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

### 1.1.2 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பிரித்தல்.

அவுஸ்திரேலிய மெல்பேன் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி பட்டத்தைத் தொடரும் மாணவி ஒருவர் தனது கலாநிதிப் பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ளார். மலேசியா மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பரீட்சகர்கள்/ மேற்பார்வையாளர்கள் மெல்பேன் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஸ்கைபி வழியே அவரது ஆராய்ச்சி தொடர்பான வாய் மொழிப் பரீட்சைகளை நடாத்தினர்.

தானிய விஞ்ஞான துறையில் கலாநிதிப் பட்டப் பின் படிப்பைத் தொடரும் மாணவர் ஒருவர் புலமை பரிசில் பெற்று பிலிபைன்ஸின் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவகத்தில் தனது ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடருகின்றார்.

## 1.2 ஆராய்ச்சி

### 1.2.1 ஆராய்ச்சி வசதிகள் நிதியம்

இந்நிதியம் தேசிய ரீதியான முக்கிய துறைகளில் தமது ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மானியங்களை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஆராய்ச்சி வசதி நிதியத்தின் (RFF) கீழ் தத்துவமானி மற்றும் முதுமானி ஆய்வு நடவடிக்கைகளுக்காக ரூபா 13.5 மில்லியன் தொகையை செலவிட்டது.

## 1.3 வருடாந்த மாநாடு

விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 27 ஆவது வருடாந்த மாநாடு 2015 நவெம்பர் 19 - 25 வரை கன்னோருவை தாவர உயிரியல் நிலையத்தில் நடைபெற்றது. பேரா. திருமதி எஸ் விமலசிரி அவர்கள் இம்மாநாட்டின் இணைப்பாளராக செயற்பட்டார். கிடைக்கப் பெற்ற 53 ஆய்வுகளில் 28 வாய் மூல முன் மொழிவுகளையும் 11 குறுகிய தொடர்பாடல்களையும் ஆய்வுக் குழு அங்கீகரித்தது. இவ்வாய்வுகள் உலர் விவசாய ஆய்வு நாளேட்டில் 27 ஆவது தொகுதியில் நான்கு சந்தர்ப்பங்களில் பிரசுரமானவையாகும். இந்நிகழ்வில் வருகை தரு விரிவுரையாளர்களாக சுவிடனின் உப்சலா பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல், பகுப்பாய்வு இரசாயனவியல் மற்றும் உயிர் மருத்துவ நிலையத்தின் கலா.ஜோனாஸ் பேர்கிஸ்ட், அமெரிக்காவின் ஆர்கோன் தேசிய ஆய்வு கூடத்தின் புவியியல் விஞ்ஞானப் பிரிவில் புவியியல் விஞ்ஞானி கலா.உமாகாந்த் மிஷ்ரா ஆகியோர் பங்குபற்றினர். இந்நிகழ்வின் பிரதம அதிதி இலங்கைக்கான நெதர்லாந்தின் தூதுவர் திருமதி ஜோன் டுர்னேவார்ட் அவர்கள் ஆவர்.

## 1.3 வி.ப.பி. நிறுவகத்தின் நலன்புரி நடவடிக்கைகள்

நிறுவகத்தின் நலன்புரிச் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கும் அவர்களுகடைய குடும்ப உறுப்பினர்களுக்கு தந்திரிமலை விஹாரையை தரிசிக்க சுற்றுலாப் பயணமொன்றை ஒழுங்குசெய்து கொடுத்தது.

### 1.3.1 விவசாய பட்டப்பின் படிப்பு மாணவர் ஒன்றியம்.

விவசாய பட்டப்பின் படிப்பு மாணவர் ஒன்றியம் (PASA) விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவக தினத்தை 2016 மார்ச் 28 ஆம் திகதி நடாத்தியது. இந்நிகழ்வு முழு நாளும் நடைபெற்றது. காலை நிகழ்ச்சிகள் பேராதனைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அப்போதைய உப வேந்தர்

அதுல சேனாரத்ன அவர்களினால் தேசிய கொடி ஏற்றப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பல்கலைக்கழக கொடி பணிப்பாளரினால் ஏற்றப்பட்டது. மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவக தினத்தில் பங்குபற்றினர். PASA இனால் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மாலை நிகழ்வுகள் விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் நடைபெற்றது. இதில் DJ, நாடகம் போன்ற பல்சுவை நிகழ்வுகள் இடம்பெற்றன.

உணவு போசாக்குத் துறையில் விஞ்ஞான முதுமானிக் கற்கையைத் தொடரும் மாணவர்கள் PASA கீழ் போசணை சங்கம் ஒன்றை தாபித்துள்ளனர். பொது மக்களின் சுகாதாரத்திற்காகப் பல நிகழ்ச்சி நிரல்களை நடாத்துகின்றனர். அவர்கள் கொழும்பு, நுவரெலியா, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் உள்ள ஆரம்ப பள்ளி, தரம் 8-11 மாணவர்களின் பெற்றோருக்கு போசணை விழிப்புணர்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தினர். சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டங்களில் 4000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். 2015 ஆம் ஆண்டில் போசணை சங்கத்தினால் பாடசாலைகளுக்கு இடையிலான வினா விடைப் போட்டியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

## 2 அடைவுகள்

### 2.1 மாணவர் அடைவுகள்

வெளிநாட்டில் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் தமது ஆய்வுக் கட்டுரைகளை முன் வைப்பதற்கு சில மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சில ஆய்வுக் கட்டுரைகள் உலர் விவசாய ஆய்வு நாளேட்டில் பிரசுரிப்பதற்கும் பேராதனைப் பல்கலைக்கழத்தின் IPURSE இல் முன் வைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டது.

### 2.2 ஒப்பந்தங்கள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டபின் படிப்பு நிறுவகத்திற்கும் ஸ்பைனின் பொலிடெக்னிக்கா டிவெலன்சியா பல்கலைக்கழகத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை மேலும் நான்கு வருடங்களுக்கு நீட்டப்பட்டது.

## 3. தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

2015 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட தோல்விகள் அவதானிக்கப்படவில்லை. 2014 ஆம் ஆண்டில் விவசாய பீட வாசிகசாலையின் சிரேஷ்ட உதவி நூலகர் ஓய்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து அப்பதவி நிரப்பப்பட வேண்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் இருந்து விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் தொழிலாளர் பதவியொன்றும் நிரப்பப்பட வேண்டியுள்ளது. மாணவர்களுக்கு வதிவிட வசதியில்லாத காரணத்தினால் மீளாய்வாண்டில் ஒரு வெளிநாட்டு மாணவர் கூட நிறுவகத்தில் கல்வி கற்பதற்குப் பதிவு செய்யவில்லை.

## 4. எதிர்காலத் திட்டங்கள்

தற்போதைய சிற்றுண்டிச்சாலையை மேம்படுத்துதல், புதிய கட்டிடத்திற்கு மின் உயர்த்தி தொடர்பை ஏற்படுத்துதல், மலசல கூட வசதிகள், விருந்தினர் விடுதி போன்ற வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமாக நிறுவகம் தனது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மாணவர்களுக்கு, கல்விசார் பதவியணியினருக்கு, ஏனைய பதவியணியினருக்கு சிறந்த தொடர்பாடல் சூழலை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. போதியளவு பதவியணியினர் இல்லாத காரணத்தினால் வடிவமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகளுக்காகப் மதியுரையாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

மேலும், நிறுவகத்தின் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக நிறுவகம் விவசாய பீடத்துடன் இணைந்து யமாகுஷி பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இதற்கமைய கூடிய சீக்கிரத்திலேயே ஆசிரிய மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

நிறுவகம் சீனாவின் விஞ்ஞான அகடமியுடன் புரிந்துணர்வு இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவுள்ளது. இதற்காக சீனாவின் குறிப்பிட்ட நிறுவகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்துக்கு வருகை தந்து கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளனர்.

**B.** புதிய அனுமதியும் மாணவர் ஆட்சேர்ப்பும்

வளங்களினதும் மாணவர்களினதும் விபரங்கள் 31திசெம்பர் 2015 இல் உள்ளவாறு

| பாடநெறி | மாணவர்களின் தொகை | பதவியணியினரின் பரம்பல் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்) | | | |
|---|---|---|---|---|---|
| | | கல்விசார் ஊழியர்கள் | கல்விசாரா ஊழியர்கள் | கல்வித்துணை ஊழியர்கள் | மொத்தம் |
| அமைய | 8 | 1 | 40 | 1 | 42 |
| எம் பில் (CR) | 26 | | | | |
| எம் பில் (R) | 3 | | | | |
| முதுமானி M.Sc. | 316 | | | | |
| வியாபார நிர்வாக முதுமாணி MBA | 34 | | | | |
| கலாநிதி (CR) | 1 | | | | |
| கலாநிதி (R) | 7 | | | | |
| மொத்தம் | **395** | **1** | **40** | **1** | **42** |


மேற்குறித்த அட்டவணையில் மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் மாணவர்களினதும் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன. (நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பிரகாரம் சிரேஷ்ட உதவி நூலகர், கணினி உள்ளீட்டு உதவியாளர் மற்றும் தொழிலாளி ஒருவர் உட்பட 3 பதவிகள் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன். வெற்றிடங்களாக இருக்கும் அப்பதவிகளை நிரப்பவதற்கு தேவையான நடவடிக்கைகளை நிறுவகம் எடுத்துள்ளது.)

**B.2** பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகளின் உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள் - 2015


| பாடநெறி | முழுநேரம் (F) பகுதி நேரம் (P) | புதிய அனுமதி (சனவரி – திசெம் 2015) | | | மாணவர் அனுமதி (2015 திசெம். 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் | | | மொத்தம் 31.12.15 இல் உள்ளவாறு | பட்டம் பெற்றோர் * | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | ஆண் | பெண் | |
| கலாநிதி | F | 121 | 195 | 316 | 178 | 165 | 343 | 659 | 118 | 147 | 265 |
| வியாபார நிர்வாக முதுமாணி | F | 19 | 15 | 34 | 126 | 57 | 183 | 217 | 17 | 06 | 23 |
| எம் பில் (CR) | F | 10 | 16 | 26 | 36 | 34 | 70 | 96 | 02 | 09 | 11 |
| எம் பில் (R) | F | 2 | 1 | 3 | 11 | 6 | 17 | 20 | 02 | 00 | 02 |
| கலாநிதி (CR) | F | 0 | 1 | 1 | 24 | 13 | 37 | 38 | 00 | 00 | 00 |
| கலாநிதி (R) | F | 4 | 3 | 7 | 45 | 31 | 76 | 83 | 04 | 05 | 09 |
| பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | F | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 04 | 07 | 11 |
| அமைய் | | 4 | 4 | 8 | 0 | 0 | 0 | 8 | 0 | 00 | 00 |
| மொத்தம் | | **160** | **235** | **395** | **420** | **306** | **726** | **1121** | **147** | **174** | **321** |

* 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு பட்டங்களைப் பெற்ற மாணவர்கள்

மீளாய்வாண்டில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகளில் மாணவர் பதிவு எண்ணிக்கை உட்பட பட்டம் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கையிலும் சிறிய வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. எனினும் கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகள் அதற்கு உரித்தாகவில்லை. இவ்வாண்டில் பட்டங்களைப் பெற்றவர்கள் 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பாடநெறிக்கு சேர்ந்த மாணவர்கள் முறையே விஞ்ஞான முதுமானி, வியாபார நிர்வாகம் முதுமானி, கலாநிதி பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.




படம் 1: 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள்




படம் 2 : 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் பட்டங்களைப் பெற்ற மாணவர்கள்

**B.3 பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகளின் வெளிநாட்டு மாணவர்களின் விபரங்கள் - 2015 - இல்லை**

| பாடநெறி | முழுநேரம் (F) பகுதி நேரம் (P) | புதிய அனுமதி (சனவரி – திசெம் 2015) | | | மாணவர் அனுமதி (2015 திசெம். 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் | | | பட்டம் பெற்றோர்- 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | |
| கலாநிதி | முழுநேரம் | 01 | - | 01 | 01 | 02 | 03 | 02 |
| முதுமானி | முழுநேரம் | 01 | - | 01 | 01 | - | 01 | |

෴ 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு பட்டங்களைப் பெற்ற வெளிநாட்டு மாணவர்கள்

முன்னைய ஆண்டு மற்றும் அதனுடன் ஒப்பிடப்பட்ட போது பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகளில் வெளிநாட்டு மாணவர் வருகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. மாணவர் விஞ்ஞான கல்விப் பதவியணியினரின் கீழ் கலாநிதி, தத்துவமானி நிகழ்ச்சிகளுக்கு ஒரு மாணவர் வீதம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. விஞ்ஞானமானி நிகழ்ச்சிக்காக பதிவு செய்த மாணவர் அதனை கைவிட்டு சென்றதுடன் மற்றைய மாணவர் கலாநிதி நிகழ்ச்சியை தொடர்ந்து வருகின்றார். எவ்வாறாயினும்

நிகழ்ச்சிகளிலுள்ள இரண்டு மாணவர்களும் உயிர் புள்ளிவிபரவியல் கல்விச் சபையின் கீழ் பட்டப்படிப்பை மேற்கொள்கின்றனர்.

**C1** பதவியணியினரின் விபரம்

2015 திசம்பர் 31 இலுள்ளவாறு கல்விசார் பதவியணியினரின் விபரம் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்)

| துறை/ பிரிவு/ பகுதி | சிரேஷ்ட பேராசிரியர் | | பேராசிரியர் | | துறை பேராசிரியர் | | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | | விரிவுரையாளர் | | தகுதிகாண் விரிவுரையாளர் | | கல்வித்துறை உத்தியோகத்தர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| நிர்வாகம் | | | 1 | | | | | | | | | | | | | | 1 | |

ஆ- ஆண், பெ- பெண்

நிறுவகத்திற்கு உரித்தான நிரந்தரப் பதவியணியினர் எண்ணிக்கை இரண்டாக இருந்த போதிலும், சிரேஷ்ட நூலகர் பதவி பொருத்தமான விண்ணப்பதாரி ஒருவர் அதற்காக முன்வராமையால் வெற்றிடமாக காணப்பட்டது. பல்கலைக்கழகம் முழுவதற்குமான வெற்றிடங்கள நிரப்பவது தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்தின் பேரில் காலக்கிரமத்தில் பல்கலைக்கழகத்தின் மூலம் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**C 2** 2015 திசம்பர் 31 இல் உள்ளவாறு கல்விசாரா ஊழியர்களின் விபரம் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்)

| பீடம்/துறை/கிளை | பதவியணியினர் எண்ணிக்கை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அதி சிரேஷ்ட[1] | | சிரேஷ்ட பதவியணி[2] | | கனிஷ்ட பதவியணி [3] | | சிற்றூழியர் | | மொத்தம் | |
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| நிர்வாகம் | - | 2 | - | 1 | 3 | 2 | 9 | 1 | **12** | **6** |
| பதிவு | - | - | - | 1 | 3 | - | 1 | - | **4** | **1** |
| கணக்கு | | 1 | - | 1 | 5 | - | 1 | - | **7** | **1** |
| கணனிப் பிரிவு | 1 | - | - | - | 1 | - | 1 | - | **3** | **-** |
| நூலகம் | - | - | - | - | - | 3 | 3 | - | **3** | **3** |

1. நிர்வாக மட்டம் மற்றும் நிறைவேற்றுத்தரம் 2. சிரேஷ்ட பதவி நிலைத்தரங்கள்
3. எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் 4. மேற்படி தரங்களுக்கு கீழான தரங்கள்

கல்விசாரா ஊழியர்களிற்கான பதவி வெற்றிடங்களை கருதும் போது வருடத்தின் இறுதிப்பகுதியில் தொழிலாளர் பதவி வெற்றிடமொன்று உருவாக்கப்பட்டது. இவ்வெற்றிடத்தை குறுகிய காலத்தில் நிரப்புவத

ற்கான செயன்முறை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாகப் பிரிவில் எஞ்சியுள்ள பணிகளை நிறைவு செய்வதற்காக கணனி பிரயோக உதவியாளர் (CAA) பதவி வெற்றிடம் ஒன்று உருவாக்கப்பட்டு அதனை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழக முறையில் காணப்படும் கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக மீளாய்வாண்டில் இப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## D ஆராய்ச்சி வெளியீடுகள்

### D 1 2015 இல் ஆராய்ச்சிகள்

D.1 A 2015 இல் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை

| பீடம் | பிரசுரிக்கப்பட்ட வகை | | எண்ணிக்கை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | |
| | | | | | |
| | சஞ்சிகைகளில் வெளியான முழு அறிக்கை* அளவு | | 03 | 01+01* | - |
| | | | | | |
| | பரிந்துரைக்கப்பட்ட சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட முழுப் பிரசுரங்களின் அளவு | | - | - | - |
| | | | | | |
| | பரிந்துரைக்கப்படாத சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட முழுப் பிரசுரங்களின் அளவு | | - | - | - |
| | | | | | |
| | செயலமர்வுகளில் முழு அறிக்கைகளாக வெளியிடப்பட்ட (30 அமர்வுப்பத்திரங்கள் + 5 ஆராய்ச்சி பட்டறைகள்) | | 28பத்திரங்கள்<br>12 சுவரொட்டிக+<br>05 பத்திரங்கள் | - | - |
| | பிரித்தெடுக்கப்படாத அளவு | | - | - | - |
| | வெளியிடப்பட்ட புத்தக அத்தியாயங்களின் அளவு | | 4 | - | - |
| | வெளியிடப்பட்ட புத்தகங்களின் அளவு | வெளியீடாக | - | - | - |
| | | உரை பெயர்ப்பாக | - | - | - |

* இந்தியாவின் தேசிய போசணை நிறுவனம் சார்க் பிரதேச உணவு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சார்க் சர்வதேச உணவு தரவு கருத்தரங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுவரொட்டிக் கண்காட்சி

\+ நிறுவகத்தின் வருடாந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள்

\+ + பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள்

### D1 (b) சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட பத்திரப் பதிவேடு – 2015

| பத்திரத்தின் தலைப்பு | பிரதான ஆசிரிய பெயர் | உப ஆசிரியரின் பெய | சஞ்சிகை பெயர் |
|---|---|---|---|
| புறம்பான நீர் முகாமைத்துவ நிலைமை கீழ் நெல் பயிர்ச்செய்கை வட்டத்தில் விதைகளுக்குமிடையே M,P,K மற்றும் உயிரியியல் சேர்த்தலும் மற்றும் பகிர்தல | கே.ஏ.ரீ.என். சோமவீர | எல்.டீ.பீ. சூரியகொட<br>டீ.என். சிறிசேன<br>டப்.ஏ.ஜே.எம். கொஸ்தா | |
| இலங்கையின் யாழ்ப்பாண பிரதேசத்திற் விஷேட கவனத்திற்கு உட்படுத்தப்பட்டு ஐதரோ கிரபிக் செயற்பாட்டின் கீழ் விை மட்டத்தில் தாக்கமளிக்கக்கூடிய இயலுமையை நோக்காகக் கொண்டு இலகுவாக நெல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு | ஐ.பிரதீபன் | எஸ். பீ.நிஸ்ஸங்க<br>எல்.டீ.பீ. சூரியகொட | |
| விதை முளைக்கும் நாட்களில் வேறுபா( முன் அறுவடையை அதிகரித்தலும் நெல்லின் நீர்ப்பயன்பாடும் | பீ.பீ.ஆர்.கே.அமர க | எல்.டீ.பீ. சூரியகொட<br>பீ.ஜி.டீ.எஸ். மாரம்பே<br>எல்.டப்.கலகெதர<br>ஆர் புன்னியர்தன<br>ஜீ.எல்.எல்.பீ.சில்வா<br>யூ.ரைந்துமோல<br>எம்.ஹோதன். | |
| வெவ்வேறு முகாமைத்துவ முறைமை கீழ் இயற்கை வெப்பத்தை அதிகரித்தல் | எம்.ஏ.பீ.டப்.கே. மல்லஆரச்சி | டப்.ஏ.ஜே.எம். கொஸ்தா<br>ஜே.பீ.டீ.ஏ.பீ.குமார<br>எல்.டீ.பீ. சூரியகொட<br>ஆர்.எம்.பொன்சேக்கா | |

D.2 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி முடிவுகள் தொடர்பான தகவல் 2015 (எதுவும் இல்லை)

D.3 பேட்ரண்ட் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல் 2015 (எதுவும் இல்லை)

**D.4 2015 இல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட அறிவுசார் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள்**

**நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| நிறுவகம் | வகை | நிகழ்வுகளின் தலைப்பு | நடைபெற்ற திகதி/கள் | பங்குபற்றியோர் தொகை | இலக்கிடப்பட்ட குழு (உதா. காளான் செய்கையாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ) |
|---|---|---|---|---|---|
| வி.வ.ப.நி | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிறுவகத்திற்கு வெளியே நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சிகள் | 20-22 பெப்ரவரி | 60 | விவ.ப.நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் |
| | குறுங்கால பாடநெறிகள் | பல்வகைத் தரவுப் பகுப்பாய்வு | 23-25 மார்ச் | 59 | பொது மற்றும் தனியார் துறை ஊழியர்கள் |
| | குறுங்கால பாடநெறிகள் | PCR Based DNA கைவிரலடையால தரவுப் பகுப்பாய்வு | 08 மே | 20 | |
| | குறுங்கால பாடநெறிகள் | மாதிரித் தொழில்நுட்பங்கள் வடிவமைப்பு மற்றும் பரிசோதனை பகுப்பாய்வு | 21-23 செப்தம்பர் | 50 | விவ.ப.நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் மற்றும் பதவியணியினர், பொது மற்றும் தனியார் துறை ஊழியர்கள் |
| | செயலமர்வு | நீர் தினம் | 01 ஒக்தோபர் | 40 | ஆராய்ச்சியாளர்கள் தொழில்துறையினர், நீர்த்துறையிலுள்ள மாணவர்கள் |
| | குறுங்கால பாடநெறிகள் | ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வள முகாமைத்துவம் | 09-12 நவம்பர் | 28 | பொறியியலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மற்றும் நீர்த்துறையிலுள்ள தொழில்துறையினர் |
| | குறுங்கால பாடநெறிகள் | R-Software | 11-13 நவம்பர் | | விவ.ப.நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் மற்றும் பதவியணியினர், பொது மற்றும் தனியார் துறை ஊழியர்கள் |
| | குறுங்கால பாடநெறிகள் | தலைமைத்துவத்திற்கும் தொழிற்துறைக்குமான தொடர்பாடல் | 21-22 நவம்பர் | 53 | விவ.ப.நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் |
| | செயலமர்வு | வேலைத்தள ஒருங்கிப்பை கட்டியெழுப்புதல் | 03 திசெம்பர் | 34 | விவ.ப நிறுவக பதவியணியினர் |

நிறுவகம் ஒழுங்குசெய்த வேலைத்தள ஒருங்கிணைப்பை கட்டியெழுப்புதல் என்ற தலைப்பிலான ஒருநாள் நிகழ்ச்சித்திட்டமொன்றை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மேல் ஹந்தானைப் பயிற்சி நிலையத்தில் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்டது. பதவியணியினர் “உங்களை வலுவூட்டுதல்” என்ற ஆளுமை அபிவிருத்தி செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

நிறுவகத்தின் பதவியணி அங்கத்தவர்களில் பலர் அவர்களது அறிவினை வளர்த்துக் கெள்வதற்கு வெளிநிறுவகங்களினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர்.

## நிறுவகத்தின் வருடாந்த மாநாடு

விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 27 ஆவது வருடாந்த மாநாடு 2015 நவெம்பர் 19 - 25 வரை கன்னோருவை தாவர உயிரியல் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதி இலங்கைக்கான நெதர்லாந்தின் தூதுவர் திருமதி ஜோன் டுர்னேவார்ட் அவர்கள் ஆவர்.




பேரா. திருமதி எஸ் விமலசிரி அவர்கள் இம்மாநாட்டின் இணைப்பாளராக செயற்பட்டார். சுவீடனின் உப்சலா பல்கலைக்கழகத்தின் பௌதீக மற்றும் பகுப்பாய்வு இரசாயன விஞ்ஞானத் துறையிலும் உயிரியல் மருத்துவ நிலையத்தின் மருத்துவர் என்பேர்க்கிவிஸ்ட் அமெரிக்க ஐக்கிய குடியரசின் கலிபோனியா பல்கவைக்கழகத்தின் சர்வதேச கற்பித்தல் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மார்க் பெல் மற்றும் --- ஆகேநென் தேசிய நூலகத்தின் சூழல் விஞ்ஞான பிரிவின் புவியியல் தொடர்பான விஞ்ஞானி பேராசிரியர் மோகன் மிஷ்ரா போன்ற அறிஞர்களால் அழைக்கப்பட்ட விரிவுரைகள் வழங்கி மாநாடு மெருகூட்டப்பட்டன. பேராசிரியர் விசாகா ஹிதல்லகே UNDP இன் நாட்டின் உதவிப் பணிப்பாளர், நிறுவகத்தின் அலுமினி உறுப்பினர் மாநாட்டின் நிறைவு விழாவை ஒட்டி தனது விரிவுரையை சமர்ப்பித்தார்

**ஜோகிம் ஞாபகார்த்த விருது**

மீளாய்வாண்டில் பட்டங்களைப் பெற்ற 321 பேருக்கு இடையே மண் விஞ்ஞான கல்விச் சபையின் கீழ் பீ.வி.சிந்தியா மற்றும் விவசாய பொருளாதார விஞ்ஞான கல்விச் சபையின் கீழ் கே.டி.த.சொய்சா ஆகிய இருவரும் உயர் பீ.பீ.ஏ மதிப்பீட்டைப் பெற்று ஜோகிம் ஞாபகார்த்த விருதினைப் பெற்றுக் கொண்டனர். விஞ்ஞானிகளின் சங்கத்தின் மாநாட்டில் சிறந்த முன்வைத்தல்களை மதிப்பீடு செய்யும் பொருட்டு கீழே காட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

1. செல்வி என்.எம்.பீ நம்பபான – கால்நடை விஞ்ஞான கல்விச் சபை
2. ஜே.ஏ.எஸ். சதுரிக்கா – மண் விஞ்ஞான கல்விச் சபை
3. ஏ.கே குணவர்த்தன – விவசாய பொறியியல் கல்விச் சபை

மீளாய்வாண்டின் நிறுவனத்தின் 32 மாணவர்கள் தமது ஆராய்ச்சி வெளியிட்டு செயற்பாட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அந்த ஆராய்ச்சி மாணவர்களுக்கு கட்டாயமான செயற்பாடொன்றாகும். மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் உள்ளடக்கப்பட்டு 4 புத்தகங்கள் அச்சிட்டு ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டன. பட்டப்பின் படிப்பு மாணவர்களால் முன்வைக்கப்பட்ட 05 ஆராய்ச்சி பத்திரங்களுக்கு மேலதிகமாக அவ்வாறான பிரித்தெடுப்புகள் பேராதனை பல்கலைக்கழகத்தின் வெளியிடப்பட்டன.

இவ்வாண்டின் போது பின்வரும் மாணவர் மாநாட்டில் 2015 சிறந்த சமர்ப்பணங்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள்

**மாநாட்டின் போது சிறப்பான சமர்ப்பணங்களை முன்வைத்தோர் 2015**

| விருது விருது வழங்குவதின் நோக்கமும் பெயரும் | உள்ளூர்/ தேசிய/ சர்வதேச அல்லது ஏனைய | பங்குபற்றியோர் பெயர் | பதவிகள் | பீடம் /துறை நிறுவகம் விபட.பி.ப |
|---|---|---|---|---|
| **நிகழ்வு I** விவசாய பொறியியல் மற்றும் நீர் வள முகாமைத்துவம் | உள்ளூர் | திரு. ஏ.ஆர் குணவர்தண | மாணவர் | வி.ப.பி.ப |
| **நிகழ்வு II** கால்நடை விஞ்ஞானம் | உள்ளூர் | செல்வி என்.எம்.பீ நம்பபான | உள்ளூர் | வி.ப.பி.ப |
| **நிகழ்வு III** உயிர் தொழில்நுட்பம் | உள்ளூர் | திரு.என்.எம்.சீ நயனகாந்த | உள்ளூர் | வி.ப.பி.ப |
| **நிகழ்வு IV** பயிர் உற்பத்தி | உள்ளூர் | செல்வி டப்.எம்.ஆர்.எஸ்.கே வர்ணசூரிய | உள்ளூர் | வி.ப.பி.ப |

| | | | | |
|---|---|---|---|---|
| **நிகழ்வு V**<br>Entomology | உள்ளூர் | செல்வி. ரீ.டீ.சீ பிரியர்தஷினி | உள்ளூர் | வி.ப.பி.ப |
| **நிகழ்வு VI**<br>மண் விஞ்ஞானம் | உள்ளூர் | செல்வி ஜே.ஏ.எஸ். சதுரிக்கா | உள்ளூர் | வி.ப.பி.ப |
| **நிகழ்வு VII**<br>உணவு விஞ்ஞானம் | உள்ளூர் | செல்வி எம்.பீ.எம்.எஸ்.எச். பெரேரா | உள்ளூர் | வி.ப.பி.ப |
| **நிகழ்வு VIII**<br>சுவரொட்டி முன்வைத்தல் | உள்ளூர் | செல்வி கே.வெரொனிக்கா | உள்ளூர் | வி.ப.பி.ப |
| **சிறந்த பிரசுரம்** | **உள்ளூர்** | **செல்வி என்.எம்.பீ நம்பபான** | **உள்ளூர்** | **வி.ப.பி.ப** |

27 ஆவது வருடாந்த மாநாட்டில் சிறந்த முன்வைப்பாளர்களுக்காக வி.ப.பி. நி பணிப்பாளரால் விருதுகள் வழங்கப்பட்டன.



திரு. ஏ.ஆர் குணவர்தண



செல்வி ஜே.ஏ.எஸ். சதுரிக்கா



செல்வி கே.வெரொனிக்கா



செல்வி எம்.பீ.எம்.எஸ்.எச். பெரேரா




திரு.என்.எம்.சீ நயனகாந்த




செல்வி என்.எம்.பீ நம்பபான




செல்வி. ரீ.டீ.சீ பிரியர்தஷினி




செல்வி டப்.எம்.ஆர்.எஸ்.கே வர்ணசூரிய

**D.5** 2015 பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச விருதுகள்

**செல்வி என்.எம்.பீ நம்பபான** 2015 வருடாந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து தலைப்புகளிலும் சிறந்த முன்வைப்பாளருக்கான விருதினைப் பெற்றார். இதில் ஐக்கிய அமெரிக்கா, சுவீடன், ஸ்பேன், நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 09 ஆராய்ச்சியாளர்கள் பங்குபற்றினர்.

D6 நிறுவகத்தினால் 31 திசெம்பர் 2015 இல் உள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட புலமைப் பரிசில்கள், பெலோசிப்ஸ், பயிற்சி நிகழ்ச்சிகள் (உள்நாட்டு மற்றும் விருதுகள்)

| பெறுனரின் எண்ணிக்கை | துறை | பதவி | நிகழ்ச்சிகளின் தன்மை | (phd, m.phil | Masters PG | Dip | குறுங்கால பயிற்சி | நிகழ்ச்சிகளின் காலம் | பெற்ற பதவியணியினரின் | நாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல்லை | | | | | | | | | | |

## E சர்வதேசம்

### E1 2015 இல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச மாநாடுகளும் பட்டறைகளும்

| இலக்கம் | தலைப்பு | (பீடம்/ திணைக்களம்/நிலையம் / பிரிவு) ஒழுங்கமைக்கப்பட்ட | நடாத்தப்பட்ட திகதி / காலப்பகுதி | இலக்கிடப்பட்ட குழு | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | IDRC-SAWA Fellowship Training Programme | கல்விச் சபை விவசாய பொறியியல் | 28 நவம்பர் 03 திசெம்பர் | நீர்துறை தொழில் துறைசார்ந்தோர் | 50 |

### E2 நிறுவகத்தினால் 2015 இல் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களும் கையொப்பமிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளும்

| No | நிகழ்ச்சி/தலைப்பு | புரிந்துணர்வு உடன்படிககை கைச்சாத்து (ஆம்/இல்லை) | பீடம்/ திணைக்கள ஈடுபாடு | கூட்டிணைவு முகவர் | கையொப்பமிட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | உயிர் புள்ளிவிபரவியலில் முதுமானி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (M.Sc./PG Diploma ) | ஆம | புள்ளிவிபரவியல் கல்விச் சபை | Yeshua Ins. Technology | |

### E3 2015 இல் சர்வதேச பட்டறைகள் மாநாடுகள் பட்டப்பின் படிப்பு கற்பித்தல் பட்டப்படிப்பு கற்பித்தல் போன்றவற்றிற்கு வருகை தந்த சர்வதேச பதவியணியினர்

| நிறுவகம் | நிகழ்ச்சியின் பெயர் | நாடு | பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| வி.ப.பி.நி | வருடாந்த மாநாடு | ஸ்பேன் | 5 |
| | | சுவீடன் | 1 |
| | | நெதர்லாந்து | 1 |
| | | ஐக்கிய அமெரிக்கா | 2 |

**F.** **2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள்**

| துறை | பாடநெறி | பாடநெறி குறியீடு | மொழிமூலம் | பட்டப்படிப்பு பாடநெறி | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | முதுமானி | தத்து. முதுமானி | கலாநிதி | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆங்கிலம் | | | | | 02 | | | |


1. தோட்டக்கலையில் முதுமானிப் பட்டம்
2. பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முதுமானிப் பட்டம்

மேலும் மாணவர்களின் தற்போதைய கேள்விற்கு ஈடாகும் வகையில் நாட்டின் தேவையையும் கருத்திற்கொண்டு பாடநெறிகளின் உள்ளடக்கத்தின் நிலைமை உயர்நிலைமையில் வைத்து விவசாய உயிரியல் கல்விச் சபையினால் உயர் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தாவர உயிரியல் பாதுகாப்பு மற்றும் இனவிருத்தி தொடர்பான முதுமானி பட்டம் மீள் பெயர் மாற்றப்பட்டிருந்தது. இப்பாடநெறிகளுக்கு 2016 ஆம் ஆண்டின் போது மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

நிதிச் செயலாற்றுகை

மீண்டுவரும் செலவின விபரம்

| விடயம் | 2013 (ரூபா.) | | 2014 (ரூபா.) | | 2015 (ரூபா.) | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட | உள்ளபடியான | ஒதுக்கப்பட்ட | உள்ளபடியான | ஒதுக்கப்பட்ட | உள்ளபடியா |
| னிப்பட்ட பதவியணி போக்குவரத்து | **41,203,000** | 39,907,916 | **50,445,000** | 42,291,801 | **58,924,000** | 57,714,664 |
| ிரயாணச் செலவினம் | **100,000** | 90,183 | **900,000** | 92,045 | **100,000** | 75,692 |
| வழங்கல் | **3,625,000** | 3,303,068 | **3,990,000** | 3,691,345 | **4,560,000** | 2,519,653 |
| ாரிப்பு சேவைகள் | **985,000** | 1,239,819 | **1,400,000** | 1,019,196 | **1,010,000** | 1,083,394 |
| ுடிக்கை செய்யப்பட்ட செலவினம் | **5,635,000** | 5,448,947 | **8,840,000** | 6,756,642 | **9,260,000** | 8,322,628 |
| ஏனைய | **18,290,000** | 20,036,458 | **22,480,000** | 36,257,738 | **16,610,000** | 28,170,302 |
| **Total** | **69,838,000** | 78,026,391 | **88,055,000** | 90,108,767 | **90,464,000** | 97,886,332 |
| **ுழங்கல்:** | | | | | | |
| ானியம் | **19,000,000** | | **16,080,000** | | **19,000,000** | |
| ாக | **27%** | | **18%** | | **21%** | |
| ட்ட நிதி | **50,838,000** | | **71,975,000** | | **71,464,000** | |
| ாக | **73%** | | **82%** | | **79%** | |





2015 ஆம் ஆண்டிற்காக நிறுவகத்தின் திறைசேரி மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 19.0 மில்லியனும் மூலதன செலவினத்திற்காக ரூபா 10.0 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது கடந்த வருட ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 3. மில்லியன் மற்றும் ரூபா 01 மில்லியன் அதிகரிப்பொன்றாகும். இவ்வருடத்திற்கான மொத்த உள்ளபடியான மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினம் முறையே ரூபா 97.87 மில்லியன் மற்றும் ரூபா ৪.22 மில்லியன் ஆகும். ஆரம்பத்தில் மொத்த மீண்டுவரும் செலவினம் (79%) ஈட்டப்பட்ட நிதியிலிருந்தும் எஞ்சிய பெறுமானம் அரச மானியத்திலிருந்து 21% பெறப்பட்டது.

58.96% ஆன மீண்டுவரும் செலவினத்தில் நிரந்தர பதவியணியினருக்கும் வருகைதரு விரிவுரையாளர்களிற்கான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் போன்ற தனிப்பட்ட கொடுப்பனவுகளிற்காக செலவிடப்பட்டது. மொத்த மீண்டுவரும் செலவினத்தின் 28.78% பாடநெறி உபகரணங்கள், விசேட சேவைகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான பிராணச செலவினங்கள் மற்றும் வருடாந்த மாநாடுகள் போன்ற ஏனையவற்றிற்கு செலவிடப்பட்டிருந்தன. மேலேயுள்ள வட்ட வரைபில் மீண்டுவரும் செலவினத்தின் கூறுகள் தரப்பட்டுள்ளன.

<u>மூலதன செலவினத்தின் விபரம்</u>

| விடயம் | 2013 (ரூபா) | | 2014 (ரூபா) | | 2015 (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது |
| (அ) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | **2,500,000** | 3,976,203 | **6,050,000** | 7,623,417 | **6,732,000** | 4,587,026 |
| (ஆ) ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவு | - | - | **1,600,000** | 1,340,392 | - | - |
| (இ) கட்டடங்களை புதுப்பித்தலும் புனர்நிர்மாணம் செய்தலும் | **6,706,000** | 8,430,449 | - | 4,929,799 | **7,060,000** | 2,516,299 |
| (ஈ) மோட்டார் வண்டி | - | - | **350,000** | 389,831 | - | 89,664 |
| (உ) ஏனையவை - வாசிகசாலை உபகரணங்கள் சஞ்சிகைகள் | - | 996,409 | **500,000** | 1,058,161 | **750,000** | 1,031,458 |
| (ஊ) விளையாட்டு உபகரணங்கள் | | | **500,000** | - | - | - |
| (ஒ) தொலைபேசி முறைமை | | | - | 426,328 | - | - |
| மொத்தம் | **9,206,000** | **13,403,062** | **9,000,000** | **15,767,929** | **14,542,000** | **8,224,447** |




மூலதன பாதீட்டில் 30.6% அதாவது அண்ணளவாக 2.51 மில்லியன் கட்டிட புனரமைப்பிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அது பாதீட்டில் 55.77% ஆக இருந்ததுடன், ரூபா 4.58 மில்லியன் விரிவுரை மண்டபங்கள் மற்றும் கணனி அறைகளில் வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக விவசாய விஞ்ஞான பீட நூலகத்திற்காக தேவையான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 1.09 மில்லியனிற்கு அண்மித்த தொகையொன்றும் செலவிடப்பட்டிருந்தது. மேலேயுள்ள வட்ட வரைபில் மூலதனச் செலவினத்தின் கூறுகள் தரப்பட்டுள்ளன

D-522

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. : සිඑල්පී-2/කේඩී/ජේ/පීජීඅයිඒ/01/2015/19 | ඔබේ අංකය / உமது இல. / Your No. : | දිනය / திகதி / Date : 2017 ජූනි 13 දින |

Postgraduate Institute of Agriculture
1 8 JUL 2017
University of Peradeniya

අධ්‍යක්ෂ,

කෘෂිකර්ම විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය

කෘෂිකර්ම විද්‍යා පශ්චාත් උපාධි ආයතනයේ 2015 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108(1) උපවගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2017 මාර්තු 03 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

SAB
18/07/2017

ඩබ්ලිව්.ප්‍රේමනන්ද

නියෝජ්‍ය විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

පිටපත් : 1. ලේකම් - විශ්වවිද්‍යාල උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය

3. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

F2.
Please send a copy to DR/PGIA also.

17

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

| | | |
|---|---|---|
| මගේ අංකය எனது இல. My No. சீஎல்பி-2/கேடீ/ஜே/பிஜீஐஏ/ 01/2015/19 | ඔබේ අංකය உமது இல. Your No. | දිනය திகதி Date 2017 மார்ச் 03 |

பணிப்பாளர்,
விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

**விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1979 திசெம்பர் 26 ஆம் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2016 செப்தெம்பர் 14 ஆந் திகதி நிறுவகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமங்கள்

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

நிறுவகத்தினால் பொருண்மையான முன்னைய காலப்பகுதியின் போது இடம்பெற்றுள்ள தவறுகளை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொகுதி பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களிலும் நிதிச்செயலாற்றல் கூற்றிலும் முறையே ரூபா 24,723,016 தொகையும் ரூபா 21,816,514 தொகையான சீராக்கங்களும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது திருத்தம் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 42,134,565 கிரயத்திலான 06

நிலையான சொத்து உருப்படிகள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம்இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் போது ரூபா 682,359 தொகை ஆராய்ச்சிப் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

67 மாணவர்களின் விஞ்ஞான ஆய்வுகூட மற்றும் நூலக வைப்புக்களாக ரூபா 241,510 கூட்டுத்தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் வைப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 156 | 1987, 1995, 2004 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நூலகப் புத்தக மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டதன் பிரகாரம் 11,624 புத்தகங்கள் காணாமல் போயிருந்தமையால் நிறுவகத்திற்கு இடம்பெற்ற நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதியின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இல் (ii) மற்றும் (iii) | தமது கடமைகளுக்கு மேலதிகமாக மேற் கொள்ளப்படும் வேலைகளுக்காக உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதமான பகுதியை தாம் உரித்தாகும் உயர் கல்வி நிறுவகத்திற்குச் செலுத்த வேண்டிய போதிலும், விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 17,805,918 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 1,780,591 ஆன கட்டணத்தை செலுத்திய சந்தர்ப்பத்தில் கழித்துக் கொண்டு பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.2 ஆம் பந்தி | மனிதவள பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிறுவகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 47,077,925 மிகையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,415,823 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,662,102 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செலவினம் ரூபா 6,883,444 ஆல் அதிகரித்தமைக்கு ஒப்பாக வருமானம் ரூபா 8,545,547 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை மீளாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன். ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொண்ட போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 58,259,174 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 113,171,141 ஆக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1979 இன் 9 ஆம் இலக்க விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின கட்டளைகளின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- பட்டப்பின் படிப்பு பாடநெறிகளில் உயர் கல்விசார் நியமங்களை பூர்த்தி செய்வதற்கும் பேணிச் செல்வதற்கும்.
- பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளுக்கிடையே உயர் தொழில்சார் மற்றும் தலைமைத்துவ பண்புகளைப் பேணிச்செல்லல்.
- பட்டப்பின் மாணவர்களிடம் உயர் ஒழுக்கம் மற்றும் விழுமியங்களை ஏற்படுத்துதல்.
- விரைவாக மாற்றமுறும் உலகலாவிய அபிவிருத்திக்கு இயைபாகக் கூடிய பட்டப்பின் பட்டதாரிகளை உருவாக்குதல்.
- உயர் நியமங்களின் அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் மாணவர்களுக்கிடையே பிரயோக ஆராய்ச்சிகளுக்காக சாத்தியப்பாட்டினை ஏற்படுத்தல்.
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்படுத்தல் என்பவற்றிற்காக திறமையான அர்ப்பணிப்புடைய பதவியணியினரையும் செயற்திறனான நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிப் பதவியணியினரையும் ஈடுபடுத்துதல்.
- அறிவினை விரிவாக்குதல்.
- பிரதான விவசாயத் தகவல்கள் வளங்களுடன் நூலகமாக மாற்றுவதற்காக நூலகத்தை மேம்படுத்துதல்.
- நிறுவக இயலளவினை பலப்படுத்துதுல்.
- ஆசிய வலயத்திலும் அதற்கு அப்பாலும் பட்டப்பின் படிப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமொன்றாக சிறப்பினை அடைந்து கொள்ளல்.

(ஆ) செயலாற்றல் தகவல்களின் பிரகாரம், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் கலாநிதி மற்றும் தத்துவமானி பட்டங்களுக்காக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாணவர் பதிவில் குறைவு முறையே 27 சதவீதம் மற்றும் 62 சதவீதமாக இருந்தது.

## 4.2 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபை தீர்மான இலக்கம் 433.3.3.10 இன் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரை கூடியது 12 மாத காலப்பகுதியொன்று பணிப்பொறுப்பு அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த முடியுமான போதிலும், அதற்கு இணங்காத வகையில் 18 மாத காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தி கூடுதலாக 06 மாதங்கள் காலப்பகுதிக்காக ரூபா 300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 நிதியத்தின் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் "மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்" இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள 03 ஆராய்ச்சி மானிய செயற்திட்டங்கள் கணக்குகளில் ரூபா 832,678 தொகை விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவகத்தின் மிகை நிதியத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் பொது நிதியத்திலிருந்தும் ஆராய்ச்சி நிதியத்திலிருந்தும் முறையே ரூபா 289,428,611 மற்றும் ரூபா 11,016,356 கால மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் ஆரம்பத்திலிருந்து வெற்றிடங்களாக காணப்பட்ட 06 பேராசிரியர்கள் பதவிகளையும், 04 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளையும் விரிவுரையாளர்களையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் 162 வெளிவாரி விரிவுரையாளர்களை ஈடுபடுத்தாமையால் விரிவுரைக் கட்டணங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 21,115,750 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் 2014 நவம்பர் 15 ஆந் திகதி ஓய்வுபெற்றுச் சென்றிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை அப்பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் கணக்காய்வுச் வழிகாட்டி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு உள்ளக கணக்காய்வுப் பிரிவினாலும் தமது நிறுவனத்திற்காக காலாண்டிற்கு ஒருமுறை உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கைகள் இலக்கிடப்பட்ட திகதிகளில் கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு குழுவின் மூலம் தமது அவதானிப்புக்கள், பரிந்துரைகளை நிறுவகத்தின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், கணக்காய்வுக் குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(அ) ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக அவதானிப்புக்கள் உள்ளடக்கிய அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

(ஆ) பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்/ வழிகாட்டிகள் தொடர்பான மீளாய்வு

(இ) உள்ளக / வெளியக கணக்காய்வு அறிக்கைகள் முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பான மீளாய்வும் தொடர் நடவடிக்கைகளும்

### 5.3 பெறுகைகள் குழு

அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விபரமாகவும் பிரதான பெறுகை திட்டம் 06 மாதங்களை மிகைக்காத காலத்திற்கிடையே முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்களையும் உள்ளவாறான செலவினங்களையும் ஒப்பிடும் போது 56 செலவின விடயங்களில் 6 முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதியப் பயன்பாடு | உரிய நோக்கங்களை நிறைவேற்ற முடியுமான வகையில் மானியங்கள் பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் | நிதிப் பிரமாணங்கள் மற்றும் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை. |

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம்

கணக்காய்வு அறிக்கைகளுக்குரிய பதில் அறிக்கை

கணக்காய்வு விசாரணை : CLP-2/KD/J/PGIA/DF/01/2015/19

திகதி 2017.04.06

கடித தொடர்பு : கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

விடயம் : கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2015

---

| | | | |
|---|---|---|---|
| 2 | | **நிதிக்கூற்றுக்கள்** | |
| 2.2 | | **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்** | |
| | 2.2.1 | **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம்** | |
| | | (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்குரிய கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் மதிப்பீட்டு வேறுபாடு 2015 ஆம் ஆண்டின் திருத்திய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது 2014 ஆம் ஆண்டிற்கான சீராக்கம் செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னரான ஆண்டுகளுக்குரிய இடம்பெற்றுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் மதிப்பீட்டு வேறுபாடுகள் பொதுச் ஒதுக்கத்திற்கு சீராக்கமும் உட்பட திருத்திய நிதிக்கூற்றுக்கள் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் பேரில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டிற்குரிய திருத்திய நிதிக்கூந்றுக்கள் 2016 நவம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| | | **(ஆ)** | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07** |
| | | ரூபா 31,885,518.00 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மீள்மதிப்பீட்டிற்காக 2016 யூலை மாதம் நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்தின் கீழ் பணிப்பாளரின் பரிந்துரைக்கமைய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் மீள்மதிப்பீட்டு பெறுமதி கணக்குகளில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| | | மோட்டார் வண்டிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>மென்பொருட்கள் தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள், சஞ்சிகைகள் என்பவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்காக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ அங்கிகாரத்திற்கு உட்பட்டு நிறுவகத்தின் பணிப்பாளரால் உரிய சொத்துக்களை மீள்மதிப்பீடு தொடர்பாக அறிவடைய நிபணத்துவத்தை உடைய உள்ளகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு தற்போது மள்மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ள்பபட்டு வருவதுடன் உரிய மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் இம்மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் சீராக்க செய்யப்படும். | |

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கணக்காய்வு விசாரணைக்காக எமது விளக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக முறைமையில் கீழே காட்டப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஆராய்ச்சி மானியம் செலுத்தப்படுகின்றன.

1. சகல நிரந்தர சேவை விரிவுரையாளர்கள்
2. சிரேஷ்ட மட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள்

அதன் பிரகாரம் விரிவுரையாளர்கள் மற்றும் தொடர்பாக பீடத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகள் அந்த ஆராய்ச்சிக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பேரவை ஆராய்ச்சிக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஆராய்ச்சிப் படிகள் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் சிரேஷ்ட மட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகள் பேரவை ஆராய்ச்சிக் குழுவினால் நியமிக்கப்பட்ட துணைக்குழு மேற்பார்வை செய்து அதன் பரிந்துரை பிரகாரம் பேரவையின் ஆராய்ச்சிக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் செலுத்தப்படும்.
கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 2014.02.11 ஆந் திகதி நிதி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 02/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 06 மாதங்களுக்குள் உரிய ஆராய்ச்சியின் செயன்முன்னேற்றம் உள்ளடக்கப்பட்ட இடைக்கால அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்ட போதிலும் பின்னர் 2014-05-28 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 05/2014 மூலம் ஆராய்ச்சிப் படிகள் கொடுப்பனவு தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2011 மற்றும் 01/2011 ச ஆகிய இரண்டு சுற்றறிக்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 69 இன் பிரகாரம் அரசினால் காலத்திற்கு காலம் விநியோகிக்கப்படுகின்ற சுற்றறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் அச்சுற்றறிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உள்ளீர்க்கப்பட்டதன் பின்னரே மாத்திரமே உரித்தாக்கிக் கொள்ள முடியும். அதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சில திருத்தங்களுக்கு உட்படுத்தி உள்ளீர்க்கப்பட்ட 01/2011 மற்றும் 01/2011ச ஆகிய இரண்டு சுற்றறிக்கைகள் ஆராய்ச்சிப் படிகள் கொடுப்பனவு தொடர்பாக அமுலாக்கப்பட்டுள்ளதுடன் அச்சுற்றறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களில் செயன் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேவைப்பாடு ஆராய்ச்சி மானிய பெறுனருக்கு இல்லை.

ஆதலால் பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா பதவியணிக்காக 2015 ஆம் ஆண்டில் செப்தம்பர் முதல் திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்த ஆராய்ச்சிப் படிகள் தற்போது பல்கலைக்கழக முறைமையினுள் செல்லுபடியான சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அச்சுற்றறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களுக்குள் செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இல்லையென குறிப்பிடுகின்றேன்.

| | | |
|---|---|---|
| | 2.3 | **பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்** |
| | | 67 மாணவர்களுக்கு உரிய ஆய்வுகூடங்கள் மற்றும் நூலக வைப்புக்களாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 241,510.00 ஆன தொகை செலுத்தி தீர்ப்பதற்குரிய பற்றுச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக்குமாறு அனைத்து மாணவர்களுக்கும் தற்போது கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(பின்னிணைப்பு 02) அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் உரிய பணத்தைச் செலுத்தி விடுவிக்க அல்லது நிறுவகத்தின் வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **2.4** | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை** | |
| | (அ) | • சில வருடங்கள் தொடர்ச்சியாக கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகள் காரணமாக விவசாய நூலகத்தின புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகளை பௌதீக ரீதியான மெய்மையாய்வு பணி 2014 ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சேவையிலிருந்த நூலகர் 2014 வருட முடிவில் சேவையிலிருந்து ஓய்வு பெற இருந்தமையால் விவசாய நூலகம் விவசாய விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனம் மற்றும் விவசாய பீட மாணவர்களுக்கான சேவையை வழங்கிக் கொண்டிருந்தமையால் இச் செயற்பாட்டிற்காக விவசாய நூலகத்தை மூடி வைத்தலிலுள்ள சிரமங்களைக் கருத்திற் கொண்டு வருடந்தோறும் நூலகப் புத்தகங்களை மெய்மையாய்வு செய்வது என்பது சிரமமாகவிருந்தது. இம் மெய்மையாய்வு செயன்முறையை விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு முற்றிலும் புறம்பான ஒரு சபையினால் பேராதனைப் பல்கலைக்கழக நூலகரின் தலைமையின் கீழ் நடாத்துவதற்கு உப வேந்தரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அக் குழு தனது முதல் அறிக்கையை 05.09.2014 ஆம் திகதி விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளரிடம் கையளித்திருந்தது.<br><br>• 09.09.2014 திகதிய கடிதம் மூலமாக அது தொடர்பான அவதானிப்புக்களைப் பெற்றுத் தருமாறு அப்போதைய விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நூலகரிடம் வினவப்பட்டதற்கமைவாக 05.03.2014 திகதிய கடிதம் மூலமாக அவரது அவதானிப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.<br><br>• இக் காலப்பகுதிக்குள் நூலகப் பணிக் குழு மற்றும் நூலகரினால் காணாமல் போனதாகக் கூறப்பட்ட புத்தகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகளின் விலைகள் குறைக்கப்பட்டு திருத்தப்பட்ட இறுதி மெய்மையாய்வு அறிக்கை 25.11.2014 ஆம் திகதி நூலகரினால் நிறுவனத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.<br><br>• 210 மற்றும் 211 ஆகிய முகாமைத்துவக் கூட்டங்களின் போது (27.11.2014 மற்றும் 30.01.2015 தினங்களில் நடைபெற்ற) எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய இவ்வறிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதி முகாமைத்துவத்துவம் ஆகியன உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக் குழு 20.02.2015 ஆம் திகதி கூடியதோடு காணாமல் போன புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகள் தொடர்பான கணக்குகள் அன்றுவரை |

நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படாமலிருந்தமையால் அவற்றை சமர்ப்பிக்குமாறு பேராதனை நூலகரினால் வேண்டப்பட்டது. காணாமல் போன புத்தகங்கள் தொடர்பான கணக்குகள் 05.03.2015 ஆம் திகதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் 12.03.2015 ஆம் திகதி குறித்த உப குழு அது தொடர்பாக செயற்படுவதற்காக கூடியது.

- எவ்வாறாயினும் அவ்வுப குழுவின் இரண்டு உறுப்பினர்களது முகாமைத்துவக் குழு உறுப்புரிமை 2015 மார்ச் மாதம் 17ஆம் திகதியுடன் காலாவதியாகியிருந்தமை காரணமாக (பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க) இச் செயற்பாடு தொடர்பிலான இரண்டாவது உப குழுவொன்று 2015 ஏப்ரல் மாதம் பணிப்பாளரினால் முகாமைத்துவக் குழுவின் அனுமதியின் கீழ் நியமிக்கப்பட்டது.

- அவ்வுப குழு 13.05.2015 மற்றும் 12.06.2015 ஆகிய தினங்களில் கூடி அதற்கான தமது பரிந்துரையை பெற்றுக் கொடுத்துள்ளது.

- 13.05.2015 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் துணை அறிக்கையின் படி காணாமல் போன புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகள் தொடர்பாக அப்போதைய நூலகரின் மீது பொறுப்புச் சுமத்த முடியாதென்பதாக விடுக்கப்பட்ட பரிந்துரை 29.05.2015 திகதிய முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியின் பேரில் அவரது ஊழியர் சேமலாப நிதியை விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கை நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 1975 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் 04 தடவைகள் நூலகப் புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அச் சந்தர்ப்பங்களில் காணாமல் போனதாக குறிப்பிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகள் தொடர்பான தகுந்த நடவடிக்கை நிறுவனத்தின் மூலம் அவ்வப்போது எடுக்கப்படாமையினால் இத் தீர்மானம் அக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

- எவ்வாறாயினும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உள்ளக கணக்காய்வாளர் அவரது 2015.07.10 திகதிய கடிதத்தினூடாக முகாமைத்துவக் குழுவினது பரிந்துரையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் காணாமல் போன புத்தகங்களின் பெறுமதி தொடர்பான செயற்பாடுகள் முடிவடையும் வரை அவரது ஊழியர் சேமலாப நிதியை விடுவிக்க முடியாதெனவும் தெரிவித்து அவரது சுய விபரக் கோவை மீண்டும் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. காணாமல் போன புத்தகங்களின் பெறுமதி ரூபா 5 லட்சத்திற்கும் அதிகமான தொகை என்பதுவே இவரது இத் தீர்மானத்திற்கான காரணமாகும்.

- உப குழு தமது இறுதி அறிக்கையை 07.08.2015 ஆம் திகதி நிறுவனப் பணிப்பாளரிடம் கையளித்துள்ளது. இவ்வறிக்கை 07.08.2015 ஆம் திகதி நடைபெற்ற விசேட கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

- இக் குழுவில் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் நூலகர் ஒரு உறுப்பினராக செயற்பட்டதன் காரணமாக அக் குழுவின் அமைப்பு தொடர்பான சர்ச்சை எழுந்ததால் மீண்டும் இச் செயற்பாட்டை

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்வதற்காக இரண்டாவது உப குழுவொன்று 22.07.2015 ஆம் திகதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டது. மேலும் இக் காலப்பகுதியினுள் காணாமல் போன புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகள் தொடர்பான தற்போதைய கணக்குகள் தொடர்பான அறிக்கையொன்றினை நிபுணத்துவம் பெற்ற ஒருவர் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. அவரது அவ்வறிக்கை 20.06.2016 ஆம் திகதி பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வனைத்து அறிக்கைகளும் 30.09.2016 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டன. அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முகாமைத்துவக் குழுவினால் நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.<br><br>• இக் காலப்பகுதியில் முகாமைத்துவக் குழுவினால் காணாமல் போன புத்தகங்களின் பெறுமதியினை நிறுத்தி வைத்துக்கொண்டு ஊழியர் சேமலாப நிதியின் மீதித் தொகையை நூலகருக்குச் செலுத்துவதெனத் தீர்மாணித்து அது குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்ட போதும் அது அவரால் மறுக்கப்பட்டது. மேலும் இது தொடர்பாக தொழிலாளர் திணைக்களத்தில் நடாத்தப்படுகின்ற விசாரணையின் போது உதவி தொழில் ஆணையாளரினால் இத் தீர்மாணத்தை அமுல்படுத்துமாறு நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதும் நூலகர் அது தொடர்பிலான தனது அதிருப்தியைத் தெரிவித்திருந்தார்.<br><br>• எவ்வாறாயினும் காணாமல் போன புத்தகங்கள் மற்றும் தவணை சஞ்சிகைகளின் பெறுமதி ரூபா.5 இலட்சத்திலும் குறைவானதாகக் காணப்பட்டதாலும் (ரூபா.464,144.86) இது தொடர்பான பரிந்துரை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவின் பரிந்துரையாகிய (இணைப்பு 03) திருமதி.ஐ.முதன்னாயக என்பவருக்கு மட்டும் காணாமல் போன புத்தகங்கள் தொடர்பான பொறுப்பினைச் சுமத்த முடியாதென்ற பரிந்துரை 2016.11.25 ஆம் திகதி நடைபெற்ற 226 ஆவது முகாமைத்துவக் குழுவினால் (இணைப்பு 04) அனுமதிக்கப்பட்டமையினாலும் அப் பரிந்துரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2017.01.28 ஆம் திகதி நடைபெற்ற 459 ஆவது பேரவைக்கு (இணைப்பு 05) சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அப் பெறுமதியான ரூபா 464,144.86 இனை நீக்கி விடுவதற்கு அனுமதி கிடைத்தது. அதன்படி குறித்த தொகை நாட்குறிப்பு பத்திரமொன்றின் மூலம் பதிவழிக்கப்பட ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (ஆ) | **பல்கலைக்கழக தாபனவிதிக் கோவை** |
| | | இந் நிறுவனத்தில் அடிப்படையாக பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுகின்ற கல்விசார் ஆளணியினரே வெளிக்கள விரிவுரையாளர்களாக பணி புரிகின்றனர். அதிகமான விரிவுரைகள் வார இறுதி மற்றும் விடுமுறை தினங்களில் நடைபெறுகின்றன. அதேவேளை அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் வார நாட்களில் ஒருசில விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.<br><br>மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 04/16 இலக்கமும் 2016.03.01 திகதியும் கொண்ட சுற்றுநிருபத்திற்கமைவாக சுய நிதி உருவாக்கம் செயற்பாடுகள் மூலம் வருமானம் ஈட்டுகின்ற ஆளணி உறுப்பினர்களின் வருமானத்தில் உழைக்கின்ற பொழுது செலுத்தப்படுகின்ற வரி குறைக்கப்படுமாயின் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அரச |

| | | |
|---|---|---|
| | | பங்கினைக் குறைப்பதற்கு அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வெளிக்கள விரிவுரையாளர்களாக சேவை புரிகின்ற பல்கலைக்கழகங்களின் நிரந்தர ஆளணிக் குழுவிலே சேவை புரிகின்ற விரிவுரையாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற பொழுது அறவிடப்படுகின்ற வரி ஏற்கனவே குறைக்கப்படுவதனால் அரச பங்கு அறவிடப்பட மாட்டாது. அதேவேளை பல்கலைக்கழக தாபனக் கோவையின் II பிரிவின் iv பந்தியின் 62 iii மற்றும் iii ஆகியவற்றிற்கமைய உயர் கல்வி நிறுவனங்களின் மேலதிக வருமானத்திலிருந்து 10 செலுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல.291 இன் மூலம் அவ்வாறான தேவை அற்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (இணைப்பு 06) |
| | (ஈ) | விவசாய விஞ்ஞான பட்டப்பின் கல்வி நிறுவனம் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமாக செயற்படுவதனால் விவசாய விஞ்ஞான பட்டப்பின் கல்வி நிறுவனத்தின் விதிமுறைகளுக்கமைவாகவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 233 இலக்கமும் 1983.06.30 திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாகவும் இந் நிறுவனத்தில் சேவை புரிகின்ற ஆளணியினரை இணைத்துக் கொள்ளலானது பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இந் நியமனப் பொறிமுறையானது பேராதெனிய பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் பொழுது செலவிடப்படும் காலத்தினைக் கருத்திற் கொண்டு அதன் ஆரம்ப கட்டச் செயற்பாடுகளான விண்ணப்பம் கோரல், பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் தேர்வு நடவடிக்கைகள் இந் நிறுவனத்தின் தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவினால் நடாத்தப்பட்டு முகாமைத்துவக் குழுவின் அனுமதியின் பேரில் பேராதெனிய பல்கலைக்கழக நிருவாகக் குழுவின் அனுமதிக்காக விடப்பட்டு அவ்வனுமதிக்கமைவாக பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவதுடன் ஊழியர்களின் சுய விபரக் கோவைகள் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா பிரிவில் பராமரிக்கப்படுகின்றன. அதற்கமைய இந்நிறுவனத்தில் கடமை புரிகின்ற ஊழியர்களுக்கான மனித வள ஆவணத்தினை தயாரித்தல் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் எதிர்காலத்திற்கான விவசாய விஞ்ஞான பட்டப் பின் கல்வி நிறுவனத்தின் மனித வள ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. |
| 3 | நிதி மீளாய்வு | |
| | 3.2 | <u>பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு</u><br>**(அ)(ஆ)**<br>நடைமுறை விகிதம் 0.98:1 ஆகவும் விரைவு விகிதம் 0.37:1 ஆகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதும் எமது நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 300,449,966 பெறுமதியான திரவ நிலையிலான வங்கி நிலையான வைப்பு எமது நிதி தொடர்பான உறுதித்தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அதேவேளை திறைசேரி மூலம் கிடைக்கின்ற ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதால் எமது நிறுவனத்தின் வருமானத்தையும் செலவுகளை ஈடு செய்வதற்காக பயன்படுத்திய போதும் தொடர்ச்சியான திட்டமிடலுக்கான வைப்புக்களை உருவாக்கிக்கொள்ளும் ஆற்றலும் எமது நிறுவனத்திடம் காணப்படுகின்றது. அதன்படி திரவ நிலையானது எமது நிறுவனத்தின் தன்மையினைப் பொறுத்து உயர் மட்டத்தில் காணப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 4 | செயற்பாட்டு மீளாய்வு | |
| | 4.1 | செயலாற்றல் |
| | 4.1 | பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை தொடருகின்ற இந் நிறுவனத்தின் மாணவர்களுக்காக அரச நன்கொடைகள் கிடைக்காமையினால் பாடநெறிகளுக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களிடம் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மூலம் நிறுவனம் ஈட்டுகின்ற வருமானத்தில் பாடநெறிகளுக்கான சகல செலவுகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் கால ஓட்டத்தின் காரணமாக அதிகரித்துச் செல்கின்ற செலவினங்களுக்கு முகங்கொடுப்பதற்காக பாடநெறிக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதேவேளை தான் தெரிவு செய்கின்ற பாடநெறியை தீர்மானிக்கின்ற பொழுது அவர்களுக்குரிய தனிப்பட்ட காரணங்கள் பொருளாதார வசதியின்மை கால முகாமை தொழில் நிலைமைகள் மற்றும் விடுமுறை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் போன்ற விடயங்களைக் கருத்திற் கோண்டு தீர்மானம் மேற்கொள்வது மாணவர்களது கடமையும் பொறுப்புமாகும். அதேவேளை தற்போது உயர் பட்டப் படிப்பிற்காக தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாகியுள்ளமையால் பட்டப்பின் படிப்பிற்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதில் பெரும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் பிரிந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது. இதனடிப்படையில் விவசாய விஞ்ஞான பட்டப் பின் கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி பாடநெறிகளைத் தொடருவதற்கான மாணவர் எண்ணிக்கை குறைந்து வருவதை குறிப்பிட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் நிறுவனத்தின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன் மாணவர் அனுமதியை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவ்விடயங்களைக் கருத்திற்கொண்ட நிறுவனம் கற்பிக்கப்படும் சகல பாடநெறிகளையும் நிறுவனத்தின் வளங்களைப் பிரயோகித்து ஆராய்ச்சி தொடர்பான பட்டங்களை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு மேலதிகமாக இவை தொடர்பான விளம்பரத் துண்டுப் பிரசுரங்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச/அரச சார்பற்ற வழங்குதல் இலக்கு வைக்கப்பட்ட மாணவர் குழுவினரிடையே ஊக்குவிப்பு செயலமர்வுகளை நடாத்துதல் நிறுவனத்தின் தகவல் முறைமையினூடாக இவை தொடர்பான இற்றைப்படுத்தல் தகவல்களை வழங்குதல் ஆகியன இவற்றில் அடங்கும். மேலும் பொருளாதார பின்னடைவுள்ள மாணவர்களுக்கு குறைந்த வட்டியுடனான கடன் வசதிகளை வங்கிகளினூடாகப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் கடன் அட்டை மூலம் பாடநெறிக் கட்டணங்களை செலுத்துவதற்கான வசதிகள் மாணவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் உள்வாங்குகின்ற மாணவர்களது எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். |

| | | |
|---|---|---|
| | 4.2 | **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்** |
| | | நிறுவனத்தில் உதவி ஆவணக் களஞ்சிய அதிகாரியாகக் கடமை புரிந்த திருமதி. கே.எஸ்.கே.ஹேரத் நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுவினதும் பேராதெனிய பல்கலைக்கழக நிருவாகக் குழுவினதும் பரிந்துரையின் பேரில் இரண்டு வருட சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு சென்றிருந்ததுடன் அப் பதவியுடன் தொடர்பான கருமங்கள் குறுகிய கால அடிப்படையில் பதிலீடு செய்ய முடியாமையினால் அப் பதவியில் பதிற்கடமை புரிவதற்கு முழு நேர அதிகாரி ஒருவரை அமர்த்துவதற்கான தேவை ஏற்பட்டது. பல்கலைக்கழகமொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற சகல செயற்பாடுகளும் இந் நிறுவனத்திலும் செயற்படுத்த வேண்டியுள்ளதால் தற்பொழுது நிறுவனத்தில் சேவை புரியும் அதிகாரிகள் இருவரில் ஒருவர் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒருவரால் மாத்திரம் முழு நேரம் பதிற்கடமையினை நிறைவேற்ற முடியாதென்பதால் நிறுவனத்தினால் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஆளணி முகாமை இல 2015.07.15 திகதிய கடிதத்தில் பல்கலைக்கழக தாபனக் கோவையில் பந்தி 3 இல. 6 இன் அடிப்படையில் குறிப்பிட்ட பதவிக்கு பதிற்கடமைக்காக ஒருவரை சேவைக்கு அமர்த்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதள்கமைவாக 18 மாத காலத்திற்கு சேவை முன்வைப்பு அடிப்படையில் பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரியொருவர் சேவைக்கு அமர்த்தப்பட்டார். மேலும் முதல் 12 மாத கால சேவையின் பின் வேறொருவரை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்ட போதும் அதற்காக 2016.09.23 திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் அப் பதவிக்காக வழங்கப்பட்ட குறித்த கால எல்லையினுள் விண்ணப்பித்த ஒரே விண்ணப்பதாரி அப் பதவிக்காக நியமிக்கப்படுவதற்கான தகைமைகளைக் கொண்டிருக்காமையால் ஏற்கனவே அப் பதவியில் பதிற்கடமை புரிந்த அதிகாரிக்கு 2016.04.10 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வண்ணம் சேவை முன்வைப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டது. (இணைப்பு 07, 08) இந் நிறுவனத்தினால் நிரந்தர பதவி ஒன்றுக்காக ஓய்வு பெற்ற அதிகாரியொருவரை அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவருடைய சேவைக் காலத்தினை 2017.04.04 ஆம் திகதியுடன் நிறைவு செய்வதற்கு முகாமைத்துவக் குழு தீர்மானித்திருந்தது. |
| | 4.3 | **நிதியத்தின் குறைப்பயன்பாடு** |
| | (அ) | ஏ.சுஹீர்தரன், ஜே.நிமலன், எல் பிரதீபன் |
| | | நிறுவனத்தின் கலாநிதி பட்டத்திற்காக பதிவு செய்த 3 மாணவர்களுக்கு திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆராய்ச்சிக் கொடுப்பனவில் அம் மாணவர்கள் நிறுவனத்துடன் இணைந்து செய்கின்ற செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற செலவுகளுக்காக குறித்த திட்ட செயற்பாட்டுக் காரியாலயத்தின் மூலம் இக் கொடுப்பனவு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும் தொகுப்பாண்டு நிறைவின் போது குறிப்பிட்ட ஆராய்ச்சித் திட்ட கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகளில் மேற்கொண்டு பொறுப்பேற்கப்பட வேண்டிய செலவுகள் காணப்படின் உடனடியாக அவற்றை செலுத்துவதற்காக கொள்வனவுப் பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பிக்குமாறும் இல்லையெனில் அவை குறித்த திட்டக் காரியாலயங்களுக்கு மாற்றிவிடப்படும் எனவும் அறிவித்து இம் மாணவர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் |

அனுப்பப்பட்டுள்ளன.

| பெயர் | அங்கீகரித்த தொகை | செலவினம் | மீதி |
|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏ.சுஹீர்தரன் | 152,000.00 | - | 152,000.00 |
| ஜே.நிமலன் | 1,980.000.00 | 1,605,977.66 | 374,022.34 |
| எல். பிரதீபன் | 1,525,000.00 | 1,218,343.70 | 306,656.30 |

(ஆ) விவசாய விஞ்ஞான பட்டப் பின் கல்வி நிறுவனத்தில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளுக்கான தேவையில் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதி கடந்த மூன்று வருடங்களிலும் கீழ் கண்டவாறு அமைந்திருந்தது.

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடு | 61,527 | 85,205 | 85,250 |
| அரச மானியம் | 19,000 | 16,000 | 19,000 |
| நிறுவனத்தின் மூலம் | 59,444 | 89,505 | 87,401 |
| கிடைத்த வருமானம் | | | |
| சதவீதம் (அரசின் மானியம் | 30% | 18.8% | 22.29% |
| ஈடு செய்யும் வகையில் | 27,511 | 21,131 | 16,566 |
| வட்டி வருமானம் | | | |
| | | | |

எனவே நிறுவனத்தின் மொத்த றிதித் தேவையில் அரச நன்கொடையாக வழங்கப்படும் விகிதாசாரம் 18 – 30 இடைப்பட்டதாகும். எனவே நிறுவனத்தின் சகல சாதாரண செயற்பாடுகளுக்கும் பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களுக்கு மேலதிகமாக வட்டி வருமானமும் இன்றியமையாததாகும். அதேபோன்று நிறுவனத்தின் வழிகாட்டல் கோவைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஒன்றிணைந்த திட்டத்திற்கமைய அடையாளம் காணப்பட்ட பிரதான செயற்பாடுகளுக்காக கடந்த மூன்று வருடங்களில் கீழ் கண்டவாறு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| பட்டப்பின் படிப்பு | 1,002,000 | 28,000 | 103,000 |
| கல்வி ஆய்வு ம் வெளியீடுகளும் | 93,000 | 191,000 | 193,000 |
| மனித வள அபிவிருத்தி திட்டம் | 8,623,000 | 10,305,000 | 5,878,000 |

அதேபோன்று நிறுவனத்தின் ஒன்றிணைந்த திட்டத்திற்கமைவாக அடையாளம் காணப்பட்ட சர்வதேச அளவிலான ஒரு ஆய்வுகூடத்தை நிறுவுதல் மற்றும் மாணவர் விடுதி ஒன்றினை அமைப்பதற்காக தேவையான நிதி அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படாமையினால் அதற்குத் தேவையான

| | | |
|---|---|---|
| | | நிதி சேகரிக்கப்படுகின்றது. இதனால் குறித்த நிதியினை தற்காலிகமாக முதலீடு செய்வதன் மூலம் நிறுவனம் எதிர்பார்ப்பது நிறுவனத்தின் அனைத்து அன்றாட நடவடிக்கைகளுக்காகவும் செலவிடுதல் மற்றும் ஒன்றிணைந்த திட்டத்திறல் இனம் காணப்பட்ட நீண்ட கால இலக்குகளை அடைந்து கொள்வதுமாகும். |
| | 4.4 | **பதவியணி நிர்வாகம்** |
| | (அ) | **ஆளணி முகாமைத்துவம்**<br><br>கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கமும் 19.03.2008 திகதியும் கொண்ட கடிதத்தின் படி நிறுவனத்தின் தேவை கருதி பெறப்படும் வருமானத்தைக்கொண்டு நிறைவு செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய தேவைப்படும் சந்தர்ப்பங்களில் குறுகிய கால எல்லைக்காக இப் பதவிகளுக்காக கல்விசார் சபைகளின் பரிந்துரையின் கீழ் விரிவுரையாளர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சிரேஷ்ட விரிவுரையாளர் (II) தரம்) வெற்றிடங்களில் ஒரு வெற்றிடத்திற்கான நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி வியாபார முகாமைத்துவம் மற்றும் விவசாய விருத்திக்கான கல்வி சபைகளுக்காக ஆய்வாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>மேலும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவினால் நிறுவனத்தின் தேவை கருதி பெறப்படும் வருமானத தைக்கொண்டு நிறைவு செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக அரசாங்க நிதி ஒதுக்கப்பட மாட்டாது. இதற்கமைய இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்கான கொடுப்பனவு செலுத்துகையில் விரிவுரைக் கெடுப்பனவை விட அதிகமான தொகையினை செலுத்த வேண்டி ஏற்படும். அதேபோன்று வெற்றிடமாகியுள்ள பதவிகள் சிலவற்றில் மாத்திரம் 11 கல்விசார் சபைகளில் சம்பந்தப்பட்ட அனைத்துப் பாடநெறிகளையும் நடாத்துவதற்கான வாய்ப்பு காணப்படாமையினால் வெளி விரிவுரையாளர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. அதேவேளை 11 கல்விசார் சபைகளில் சேவை புரிவதற்காக பல்வேறு விடயங்கள் சம்பந்தமான அறிவுள்ள விரிவுரையாளர்களுக்கான தேவை காணப்படுவதாலும் ஒவ்வொரு கல்விசார் சபையினாலும் கற்பிக்கப்படுகின்ற பாட அலகுகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதனாலும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள வெற்றிடமாகியுள்ள 5 பதவிகளினால் அவ்வனைத்து பாட அலகுகளையும் கற்பிக்க முடியாதென்பதை குறிப்பிட வேண்டும |
| | (ஆ) | இந் நிறுவனத்தில் விவசாய விஞ்ஞான நூலகத்தில் சேவையாற்றிய சிரேஷ்ட உதவி நூலகர் சேவையிலிருந்து ஓய்வு பெற்று கல்வியாண்டின் இறுதித் தினமாகிய 2014.11.14 வரை சேவையிலிருந்துள்ளார். இதன் காரணமாக இப் பதவி 2014.11.14 திகதி வெற்றிடமாகியதுடன் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2014.10.24 ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டது. அதற்கமைய கிடைக்கப் பெற்றிருந்த 3 விண்ணப்பங்களில் ஒருவர் மாத்திரம் |

| | | |
|---|---|---|
| | | தகைமை பெற்றிருந்தார். இதனடிப்படையில் 2015.01.30 ஆம் திகதி நடைபெற்ற 211 ஆம் இலக்க முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் 2015.01.22 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் வெற்றிடமாகியிருந்த பதவிகளில் அமர்த்தும் அளவிற்கு அவர் தகுதி பெற்றிருக்காமையினால் அப் பதவிக்கு இணைத்துப் கொள்ளாமல் இருப்பதற்கும் மீண்டும் ஒரு முறை விண்ணப்பங்கள் கோரவும் தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை 27.02.2015 திகதி நடைபெற்ற 212 இலக்க முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அதற்கமைய நிறுவனத்தினால் இப் பதவிகளுக்காக மீண்டும் விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் பேராதெனிய பல்கலைக்கழகத்திலும் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாக இந்நிறுவனத்தினாலும் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பேராதெனிய பல்கலைக்கழகத்திடம் வேண்டப்பட்டது. அதற்கமைய இதுவரை பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பேரவையின் பரிந்துரை மற்றும் நிருவாகக் குழுவின் அனுமதியின் படி தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2016.06.25 நடைபெற்ற நிருவாகக் குழுக் கூட்டத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 2016.09.05 நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை கடமை ரீதியாக உப வேந்தர் அவர்களுக்கு சமூகம் தர முடியாமல் போனதால் பிற்போடப்பட்டது. இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை 2016.10.28 திகதி நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2015 வருட இறுதி வரை இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்த போதும் பேராதெனிய பல்கலைக்கழகத்தினால் இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து 2017.02.01 திகதி குறித்த பதவிக் கடிதம் தெரிவு செய்யப்பட்ட உதவி நூலகருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவர் 2017.03.15 திகதி விவசாய நூலகத்தில் சேவைக்காக சென்றுள்ளார். |
| | 5 | **கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்** |
| | 5.1 | **உள்ளக கணக்காய்வு** |
| | | விவசாய விஞ்ஞான பட்டப் பின் கல்வி நிறுவனத்திற்கான உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படாதிருப்பதுடன் பேராதெனிய பல்கலைக்கழக உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் இதுவரை உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருக்கின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி கணக்காய்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டாலும் பேராதெனிய பல்கலைக்கழகஉள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மாத்திரமன்றி விஞ்ஞான பட்டப் பின் கல்வி நிறுவனத்தினதும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் ஏற்கனவே திட்டமிட்டது போன்று விவசாய விஞ்ஞான பட்டப் பின் கல்வி நிறுவனத்தின் கணக்காய்வு திட்டத்தினை முழுமையாக செயற்படுத்த முடியாமல் போகும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனினும் ஒரு வருடத்தில் செயற்படுத்த முடியாமல் போன கணக்காய்வு திட்டத்தினை அதற்குப் பிந்திய வருடங்களில் நடைமுறைப்படுத்துவதற்கும் உள்ளக நிருவாக முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குமான அறிவுறுத்தல்கள் பல்கலைக்கழக உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் |

| | | |
|---|---|---|
| | | பெற்றுக் கொடுக்கப்படும்.<br><br>காலாண்டு அடிப்படையில் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2015 வருடாந்த கணக்காய்வுத் திட்டம் 2014.12.31 திகதி நடைபெற்ற 48 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இதற்கு மேலதிகமாக 2015.06.16 திகதி நூலகத்தின் உள்ளக நிருவாக முறைமையின் மேற்பார்வை தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | 5.2 | **கணக்காய்வுக் குழு** |
| | | 2015 வருடாந்த அறிக்கையில் சேர்ப்பதற்காக கணக்காய்வு அவதாணிப்புகள் அடங்கிய அறிக்கை குறிப்பிட்ட வருடாந்த அறிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2016.01.14 திகதி நடைபெற்ற 52 ஆவது கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. (இணைப்பு 09)<br><br>(B)B), E) தொகைப் புத்தகங்கள் மெய்மையாய்வு தொடர்பான அறிக்கை, நூலக புத்தக மெய்ப்படுத்தல்இ நிலையான சொத்துக்கள் சம்பந்தமான ஆவணம், வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம், உள்ளக கணக்காய்வு அதிகாரி ஒருவரை நியமித்தல், கணக்காய்வாரள் நாயகத்தின் அற்க்கை, உள்ளக நிருவாக முறைமை, வருடாந்த கணக்காய்வு திட்டம், பொது வியாபாரம் பற்றிய பரிந்துரைகள் சம்பந்தமான தொகுப்பு மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியன தொடர்பான அவ் வறிக்கை நிறுவனத்திற்குக் கிடைக்கும் வகையில் கணக்காய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான பரிந்துரைகளை முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய நூலக புத்தகங்களின பாவனை தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று முன்மொழியப்பட்டு தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ளது. |
| | 5.3 | **கொள்வனவுத் திட்டம்** |
| | | விவசாய விஞ்ஞான பட்டப்பின் கல்வி நிறுவனத்திற்காக வருடாந்தம் வழங்கப்படுகின்ற திறைசேரி ஒதுக்கீட்டின் அளவு வருடாந்த அடிப்படையில் வழங்கப்படுவதுடன் அதனடிப்படையில் வருடாந்த வரவு செலவு அறிக்கை மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் ஆகியன தயாரிக்கப்படுகின்றன. அதன்படி அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் நிதியின் அளவு திட்டவட்டமாக திட்டமிட முடியாதுள்ளதால் 3 வருட காலத்திற்கு கொள்வனவு திட்டமொன்றினைத் தயாரித்தல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகையால் வருடாந்த அடிப்படைணில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகின்றேன். மேலும் அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் நிதியின் அளவு திட்டவட்டமாக திட்டமிட முடியாதுள்ளதால் அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் நிதியின் அளவை திட்டவட்டமாக எதிர்வுகூற முடியாதுள்ளதாலும் ஒவ்வொரு வருடமும் நிறுவனத்தினால் மாணவர் அனுமதி ற்றும் குறுகிய கால பாடநெறி கருத்தரங்குகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் வருமானம் வேறுபடுவதனாலும் ஒவ்வொரு வருடமும் நிறுவனத்தினதும் ஏனைய 11 கல்விக் குழுக்களினதும் தேவைகள் அவ்வவ் வருடங்களின் மாணவர் அனுமதி எண்ணிக்கை மற்றும் குறுகிய கால பாடநெறிகளை நடாத்துதல் என்பவற்றிற்குச் சமாந்தரமாக மாறுபடும். இதனால் |

| | | | |
|---|---|---|---|
| | | 3 வருடங்களுக்கான கொள்வனவு திட்டத்தினை தயார் செய்ய முடியாது.<br><br>2015 ஆம் வருடத்திற்கான நிறுவனத்தின் கொள்வனவுத் திட்டம் வருடத்தினுள் நடைபெற்ற சகல கொள்வனவு நடவடிக்கைகளையும் உள்ளடக்கி விளக்கமான ஒரு திட்டமாக தயாரிக்கப்பட்டிருந்தாக தெரிவிப்பதுடன் நிறுவனத்தின் அவசர தேவை நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் உள்ளடக்கப்பட்டு மீள் திருத்தியமைக்கப்பட்ட கொள்வனவுத் திட்டமொன்று முகாமைத்துவக் குழுவின் அனுமதியின் பேரில் இற்றைப்படுத்தப்பட்டு குறித்த நிறுவனங்களுக்கு அனுமதிக்காக வழங்கப்பட்டுள்ளன. | |
| | 5.4 | பாதீட்டுக் கட்டுப்பாடு | |
| | | (அ) | **கல்விசார் படிகள்** - 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் பின்னர் வெளியிடப்பட்ட 2014-12-21 மற்றும் 2014/14 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழு சுற்றறிக்கை மூலம் கல்விசார் படிகள் 90% முதல் 135% வரை அதிகரித்த காரணத்தினால் மதிப்பிடப்பட்ட செலவினத்தை மிகைத்து மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு நேர்ந்தது.<br><br>**வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள்**<br>ஆண்டில் தயாரிக்கப்பட்ட போதிலும், 2015 கல்வியாண்டிற்காக ஒவ்வொரு கல்விச் சபைகளில் பாதீடு 2015 கல்வியாண்டின் மீதி பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டே டுகின்றன. அதன் பிரகாரம் கல்விப் பதவியணிக்கு பாதீடு தயாரிக்கும் போது மாணவர் எண்ணிக்கை பாடநெறி கட்டணங்கள் அதிகரிப்பதன் காரணமாக வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களும் அதிகரிக்கின்றன. ஆதலால் மதிப்பிடப்பட்ட வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களை மிகைத்து செலவினத்தை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு நேர்ந்தது.<br><br>**எழுதுகருவிகள் செலவினம்** - ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட அத்தியவசிய எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டமையால் அது 6% சதவீதம் அளவில் அதிகரித்திருந்தது.<br><br>**ஏனைய வழங்கல் சேவைகள்** - எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட கூடியளவு வழங்கல் சேவை பெற்றுக்கொண்டமையால் செலவிடுவதற்கு நேர்ந்தது.<br><br>**வாகனப் பராமரிப்பு செலவினம்** - எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட கூடியளவு வாகன பராமரிப்பு நடவடிக்கைகள் காரணமாக செலவிடுவதற்கு நேர்ந்தது.<br><br>**இயந்திர பராமரிப்பு செலவினம்** - எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட கூடியளவு இயந்திர பராமரிப்பு, செவை உடன்படிக்கை கட்டணங்கள் அதிகரித்ததன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட கூடியளவு செலவிடுவதற்கு நேர்ந்தது.<br><br>**அச்சிடல் மற்றும் விளம்பரம்** - முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது விளம்பர நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டதன் |

| | | | |
|---|---|---|---|
| | | | காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட கூடியளவு செலவிட நேர்நதமை அது 6 % அதிகரிப்பொன்றாகும்.<br><br>**உபசரிப்புச் செலவினம்** - முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட கூடியளவு பரீட்சைகள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்பட்டதன் காரணமாக உபசரிப்பு செலவினங்களுக்காக செலவிட நேர்ந்தமை |
| | | | **சம்பளம் மற்றும் வேதனங்கள், பல்கழைக்கழக ஓய்வூதியம் 15 விசேட படிகள் வாழ்க்கை செலவினக் கொடுப்பனவு, மேலதிக படிகள்** - மீளாய்வாண்டில் வெற்றிடமாக காணப்பட்ட சிரேஷ்ட உதவி நூலகர், கணனி உள்ளீட்டு உதவியாளர், 02 தொழிலாளர் பதவிகள், ஒருங்கிணைப்பாளர் (முதல் 6 மாதங்கள்) சாரதி போன்ற பதவிகள் ஆண்டினுள் நிரப்புவதற்கு திட்டமிட்டு பாதீடு தயாரிக்கப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிரப்புவதற்கு முடியாதமையால் மிகை ஒதுக்கீடாக இருந்தது.<br><br>**மேலதிக நேர படிகள்** - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் வழிகாட்டலின் கீழ் முறையான திட்டத்தின் கீழ் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தியதால் மேலதிக நேர வேலையை மட்டுப்படுத்தியதால் பாதிடப்பபட்ட செலவினத்தை விட உள்ளவாறான செலவினம் குறைவடைந்திருந்தது.<br><br>**உபசரிப்பு படிகள்** - மதிப்பீடு தயாரிக்கும் போது இடம்பெற்ற தவறு காரணமாக ஆரம்ப சம்பளத்தின் பேரில் கணக்கிடப்பட்ட காரணத்தினால் மிகை ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.<br><br>**பணிக்கொடை கொடுப்பனவு** – 2015 ஆம் ஆண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 600,000 ஆக இருந்ததுடன் திருத்திய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளவாறான செலவினம் ரூபா 582,492 ஆகும். இதன் படி ரூபா 17,507 ஆக இரந்ததுடன் அது மொத்த மதிப்பீட்டில் 3 சதவீத விலகலாகும்.<br><br>**உள்நாட்டு பிரயாணச் செலவினம்** - மீளாய்வாண்டில் சாரதி வெற்றிடங்கள் காணப்பட்டதன் பேரில் நிறுவகத்தில் வெளிவாரி கடமைகள் காணப்பட்ட சந்தர்ப்பங்களின் போது நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததன் பேரில் வெளிவாரி கடமைப் பயணங்கள் குறைவடைந்தது. ஆதலால் சாரதிகளுக்கு வழங்கிய படிகள் பேரில் உரிய செலவினத்தில் மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>**எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள்** - 2015 ஆம் ஆண்டின் போது எரிபொருள் கட்டணங்கள் குறைவடைந்தயும் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10-03-2011 ஆம் திகதிய 2/2011 சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் படிகள் மற்றும் வேதனங்கிளன் கீழ் எரிபொருள் படிகளின் கீழ் கொடுப்பனவு செய்த காரணத்தினால் மதிப்பிட்டட்ட செலவினத்தில் மிகை ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. |

**சீருடை** - முன்னைய ஆண்டுகளில் சீருடைக்கு உரித்துடைய ஊழியர்களுக்கு வருடாந்த படியொன்று செலுத்தப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுகளின் போது சீருடைக்காக புடவை மற்றும் தையல் கூலி கொடுப்பனவு அடிப்படையில் செலவினம் குறைவடைந்துள்ளது.

**இரசாயனப் பொருள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள்** - விவசாய உயிரியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சி, பயிர் பாதுகாப்பு போன்ற கல்விப் பிரிவுகளுக்காக தேவையான கண்ணாடிப் பொருட்கள் கொள்வனவிற்காக 2015 அம் ஆண்டில் ரூபா 1,950,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. உரிய மாதிரிகளைத் தயாரித்தல், தொழில்நுட்ப சூழலை பிரதிநித்துவப்படுத்தல் போன்ற உரிய கல்விப் பிரிவினால் செய்யப் தொழில்நுட்ப நிபுணர்கள் நிறுவனத்திடம் பாணப்படாமையைக் கருத்திற் கொண்டு 2015.05.29 ஆம் திகதி 214 ஆம் இலக்க முகாமைத்துவ கூட்டத்தின் போது உரிய பணத்தை விவசாய பீடத்திற்கு மாற்றப்பட்டு அனுப்ப அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015.06.18 ஆம் திகதி 1, 713, 568.71 ஆன பணத்தை பீடத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் உரிய பணத்திலிருந்து ஆண்டின் இருதி வரை ரூபா 13, 513.59 தொகை செலவிடப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட செலவினை விட குறைந்த செலவினம் குறைவடைந்திருந்தது.

**கட்டிட பராமரிப்புச் செலவினம்** - எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட கட்டிட திருத்த வேலைகள் ஓராண்டிற்குள் மேற்கொள்ள முடியாதிருந்த காரணத்தினால் உள்ளவாறான செலவினம் குறைவடைந்திருந்தது.

**போக்குவரத்து உடன்படிக்கை சேவைகள்** - முன்னைய ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட சில செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் குறைவடைந்ததன் காரணமாக போக்குவரத்து உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் குறைவடைந்தன.

**மின்சாரம்** - முன்னைய ஆண்டுகளின் மின்பாவனையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மின்சாரப் பட்டியல் பாவனை குறைவடைந்தமையால் உள்ளவாறான செலவினம் குறைவடைந்திருந்தது.

**சுத்திகரிப்பு சேவை** - சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்கிய நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய செலுத்தப்பட வேண்டிய அதிகூடிய கொள்வனவுப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதியினடிப்படையில் வரவு செலவு தயாரிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவுக்காக கொள்வனவுப் பற்றுச்சீட்டுக்களை வழங்குளையில்

மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் தரம் மற்றும் ஊழியர்களின் வரவின்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு குறைந்த பற்றுச்சீட்டுக்களே சமர்ப்பிக்கப்பட்டதால் மேலதிக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நீர்க் கட்டணம்** - கடந்த வருடங்களில் ஒரே அளவான நீர்ப் பாவனை மற்றும் ஒரே தொகை பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியைக் கருத்திற் கொண்டு வருடத்திற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் குறித்த வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த புதிய மாணி வாசிப்பு முறைமைக்கமைய பாவிக்கப்பட்ட கூறுகளின் அளவு குறைவடைந்திருந்ததால் செலவு குறைந்திருந்தது.

**விரிவுரையாளர்களின் போக்குவரத்துச் செலவு** - போக்குவரத்துச் செலவு கோருகின்ற வெளிவாரி விரிவுரையாளர்கள் எனும் அடிப்படையில் கல்விக் குழுக்கள் சிலவற்றில் சேவையாற்றுகின்ற விரிவுரையாளர்கள் சிலர் குறித்த வருடத்தில் கல்விக் குழுக்களில் விரிவுரையாளர்களாக சேவை புரியாததன் காரணமாக உண்மையாக மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்துச் செலவு வரவு செலவில் குறிப்படப்பட்ட செலவினை விடக் குறைவானதாக இருந்தது.

**விசேட சேவைகள்/ கவுன்சில் குழுக்கள்** - வருட இறுதியில் நடாத்தப்படுகின்ற முகாமைத்துவக் குழுக் கூட்டம் நிறுவனத்திற்கு வெளியே அமைந்துள்ள ஒரு இடத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கமைய வரவு செலவு தயாரிக்கப்பட்டிருந்த போதும் எதிர்பார்க்கப்பட்டது போன்று அதனை செய்ய முடியாமல் போனதால் செலவினத் தலைப்பில் கூடுதலான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**கல்வி மற்றும் வெளியீடுகள்** - நிறுவனத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்களின் ஆராய்ச்சிகளை வெளியிடும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான மாநாடுகளில் கலந்து கொள்வதற்கான அனுசரணை வழங்கும் வகையில் இவ்வொதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்காக தயாரிக்கப்பட்ட வழிகாட்டி முகாமைத்துவக் குழுவினால் 2015.11.27 ஆம் திகதி நடைபெற்ற 218 ஆவது கூட்டத்திலேயே அங்கீகரிக்கப்பட்டது. இதனால் குறித்த வருடத்தினுள் கோரப்பட்டிருந்த போதும் வழிகாட்டி அப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக மேலதிக ஒதுக்கீடு மெற்கொள்ளப்பட்டுள்ளது.

**பதவியணியினர் அபிவிருத்தி** – ஆண்டில் பதவியணியினருக்காக 2 செயலமர்வுகள் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஒரு செயலமர்வு மாத்திரம் நடாத்தப்பட்டதால் மிகை ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.

**பட்டப்பின் படிப்பு ஆய்வுகளும் புலமைப்பரிசில்களும்** - நிறுவகத்தில் ஆராய்ச்சி பட்டப்பின் படிப்பிற்காக பதிவுசெய்த மாணவர்களின் சிறிய ஆராய்ச்சி செலவினங்களுக்காக அனுசரணை வழங்கலை நோக்காகக் கொண்டு நிதிஏற்பாடு ஒதுக்கபட்ட போதிலும் கோரப்படாமையால் உள்ளவாறான செலவினத்தில் குறைவு இடம்பெற்றிருந்தது.

**விடுமுறை ஆணைச்சீட்டு** - முன்னைய ஆண்டுகளின் உள்ளவாறான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படாமையால் மிகை ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வங்கிக் கட்டணங்கள்** - முன்னைய ஆண்டுகளின் உள்ளவாறான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு, எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படாமையால் மிகை

| | | | |
|---|---|---|---|
| | | | ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>**பரிசுகளும் மானியங்களும்** - சேவைக்காலத்தின் பிரகாரம் வழங்கப்படும் பரிசுகள் மற்றும் மானியங்கள் பேராதனைப் பல்லைக்கழகத்தின் மூலம் பரிந்துரைக்கப்படுகின்றது. குறித்த ஆண்டிற்கு உரித்துக் காணப்பட்ட போதிலும் அம்மானியங்கள் பெறுவனவில் தாமதம் காணப்படுவதால் மேற்படி விலகல் ஏற்பட்டுள்ளது.<br><br>**செயலமர்வுகளும் கருத்தரங்குகளும்** - முன்னைய ஆண்டுகளின் உள்ளவாறான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு, எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படாமையால் மிகை ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>**முத்திரைக் கட்டணம்** - முன்னைய ஆண்டுகளின் உள்ளவாறான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு, எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படாமையால் மிகை ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>**அறிமுகச் செலவினம்** - முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக இவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட மாணவர் பதிவு குறைவடைந்திருந்தன. அதன் காரணமாக மிகை ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.<br><br>**ஏனைய மீண்டுவரும் செலவினம்** - முன்னைய ஆண்டுகளின் உள்ளவாறான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படாமையால் மிகை ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. |
| | | (ஆ) | **தளபாட பராமரிப்புச் செலவினம்** - பழுதடைந்த மற்றும் உடைந்த தளபாடங்களுக்கான சிறு திருத்தத்திற்காகவும் பிரம்பினால் பிண்ணுவதற்காகவும் இவ்வொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2015 வருடத்தினுள் இச் செயற்பாட்டிற்கான ஆளணியினர் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் ளொள்வதில் காணப்பட்ட சிரமம் காரணமாக இச் செயற்பாடு நடைபெறவில்லை. இதனால் இதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை.<br><br>**வாடகைச் செலவினம்** - நிழற்பட நிலையத்தின் வாடகை மற்றும் ஏனைய செலவுகளுக்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட போதும் 2015 ஆம் வருடம் இந் நிலையம் மாணவர் நலன் புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டதன் காரணமாக அவ் வாடகை வருமானம் கிடைக்காத அதேவேளை குறித்த வாடகை மற்றும் ஏனைய செலவுகள் நிறுவனத்தினால் நேரடியாக பேராதனை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்படுவதனால் குறித்த வாடகை செலவுகளுக்காக நிறுவனத்தினால் செலவு மேற்கொள்ளப்படவில்லை.<br><br>**செயற்திட்டச் செலவுகள்** - நிறுவனத்தினால் யெசுவா டெக் நிறுவனம் கானாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கமைய குறித்த வருடத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட பொழுதும் குறித்த வருடத்தினுள் யெசுவா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நிறுவனத்திற்கு கிடைக்காமையினால் செலவுகள் கணக்கில் வரவிடப்படவில்லை.<br><br>**கூட்டுத் திட்டம் மற்றும் அரசாங்கச் செலவுகள்** - 2015-2019 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட நிறுவனத்தின் திரட்டிய திட்டத்தினை வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கமைய நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த வகையில் இதனை நிறைவு செய்ய முடியாமல் போனதன் காரணமாக செலவு |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்படவில்லை. |
| | | (இ) | **இடைநேர் கொடுப்பனவு** - இக் கொடுப்பனவு வழங்கப்படுகின்ற பொழுது வாழ்க்கைச் செலவு விபரப் பட்டியலுக்கமைவாக செலுத்தப்படுகின்ற வாழ்க்கைச் செலவு கொடுப்பனவிற்கு உள்ளடக்குவதாக குறிப்பிடப்பட்டது. இதனால் அதற்கான நிதி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>**பதிற்கடமைக் கொடுப்பனவு** - இந் நிறுவனத்தில் சேவையாற்றி 2014.11.30 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சிரேஷ்ட உதவி நூலகரினது பதவி வெற்றிடத்தை குறித்த ஆண்டினுள் நிவர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் பொருத்தமான ஒரு விண்ணப்பதாரியை பெற்றுக் கொள்ள முடியாமல் போனதன் காரணமாக குறித்த பதவி வெற்றிடத்தை குறித்த ஆண்டினுள் நிவர்த்தி செய்ய முடியவில்லை. இதனால் இப் பதவியில் பதிறகடமை புரிவதற்காக விவசாய பீடத்தில் சேவைக்காக இணைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட உதவி நூலகரொருவர் நியமிக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவின் 720 இலக்க சுற்றுநிரூபத்திற்கமைய அடிப்படைச் சம்பளத்தில் 25% கொடுப்பனவு உச்ச கால எல்லையான 06 மாத காலத்திற்கு பதிற்கடமைக் கொடுப்பனவாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.<br><br>**எரிபொருள் கொடுப்பனவு** - 2011.03.10 திகதிய 2011/2 இலக்கத்தையுடைய பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் சுற்றுநிரூபத்திற்கமைய எரிபொருள் மற்றும் எண்ணை செலவுத் தலைப்பின் கீழ் செலுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் 2015.07.25 திகதிய 2015/9 இலக்கத்தையுடைய பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் சுற்றுநிரூபத்திற்கமைய இது சம்பளத்தின் அடிப்படையிலான ஒரு கொடுப்பனவாக வழங்கப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.<br><br>**ஏனைய ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள்** - 2015 ஆம் வருடம் செலவு மதிப்பீடு செய்யப்படாத போதும் வருடத்தினுள் செலவு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இந் நிலையைக் கட்டுப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம்.<br><br>**சொத்துக் கடன் வட்டி** - சொத்துக் கடன் மீதான வட்டியின் அளவில் அரசாங்கத்தினால் மீள் நிரப்பு செய்யப்படுகின்ற வட்டியின் அளவு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கடந்த வருடங்களில் மீள் நிரப்பு செய்யப்பட்டிருப்பதனால் அதற்காக நிதி ஒதுக்கப்படாவிட்டாலும் 2015 ஆம் வருடத்திலிருந்து அவ்வாறு மீள் நிரப்பு செய்யப்படாததன் காரணமாக அது நிறுவனத்தின் செலவாகக் காட்டப்பட்டுள்ளது.<br><br>கடந்த வருடங்களின் புள்ளிவிபரங்களுக்கமைய வரவு செலவு தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிதி ஒதுக்கப்படாவிட்டாலும் குறிப்பிட்ட வருடத்தில் இச் செலவை மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br><br>**ஏனைய மூலதனச் செலவுகள்** - 2014.06.30 திகதிய 2014/5 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் நிதிச் சுற்றுநிரூபத்திற்கமைய மனித மூலதன அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி வளப்படுத்தல் ஆகிய தலைப்புகளின் கீழ் மூலதன செலவுகளாக உத்தேசிக்கப்பட்ட செலவுத் தலைப்புகளுக்கமைவாக குறித்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 5,877,850 தொகை நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளால் வெளிக்காட்டப்பட்டுள்ளதைப் போன்று வருடத்தின் செலவாக ஏனைய மூலதன செலவு தலைப்புகளின் கீழ் தரக் கணிப்பு அறிக்கையிலே காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய வரவு செலவு ஒதுக்கீடு இன்றி இச் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td>(ஊ)</td><td>பட்டப்படிப்பு உறுப்புரைக் கட்டணம் - 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட பாடநெறிகளை நிறைவு செய்ததன் பேரில் அவர்களினன் நிலுவை பதிவுக் கட்டணங்கள் அனைத்தும் அறவிடப்பட்டமையால் கட்டணங்கள் அளவு அதிகரித்துள்ளது<br><br>பட்டப்படிப்பு பாடநெறிக் கட்டணம் - மீளாய்வாண்டில் பல கல்வி சபைகளுக்கு பல பாடநெறிகளுக்கு உரிய பாடநெறிக் கட்டணங்கள் அதிகரித்தமை காரணமாக போதியளவினை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.<br><br>பட்டப்படிப்பு பரீட்சைக் கட்டணம் - மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடிய அளவினை கூடியளவு பரீட்சைக்காக விண்ணப்பித்தல் மற்றும் அதற்காக பரீட்சைக்கட்டணங்கள் செலுத்தியமையால் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.<br><br>வெளித்தரப்பினருக்கு சேவைகள் வழங்கல் - நிறுவகத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பல ஆராய்ச்சி செயற்திட்டங்களில் வாகனங்கள் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டமையால் கிடைத்த வருமானம் எதிர்பார்த்த வருமானத்தை விட அதிகரித்தமை காரணமாக கூடுதலான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.</td></tr>
<tr><td>6</td><td colspan="3"><u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u></td></tr>
<tr><td></td><td colspan="3">மேற்ப கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட 2 கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி இனங்காணப்பட்ட பலவீனங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்</td></tr>
</table>

ஒப்பம்: பேராசிரியர் S.சமித

பணிப்பாளர்

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்

பிரதிகள்

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு
3. கணக்காய்வு அத்தியட்சகர் - அரச கணக்காய்வுப் பிரிவு
4. பிரதி உள்ளகக் கணக்காய்வாரள் - பேராதனைப் பல்கலைக்கழகம்